உ

இராமதேவர்

சிவயோகம் 200

308
F04

உ

முருகன் துணை.

நாற்பத்தெண் பெயர்களில் மகாமகுத்துவம்

பொருந்திய

இராமதேவர் அருளிச்செய்த

சிவயோகம் - உ௱.

முன் அச்சிற் பதித்த பிரதிகளிணைக்க

பரிசோதித்து.

இவை,

சிதம்பரம்

குருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

துங்கமுடாககம்

அருணகிரிமுதலியார்

அவர்களது.

அம்பாள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரிஹ

உ

கடவுள துணை.

இராமதேவர்

சிவயோகம் ௨௱

குருவணக்கம்.

மூலமெனுமுதற்பொருளா முத்திநடுவணையில்
முகண்டமானதொரு பிரம்மத்துக்கப்பால்
ஞாலமெனுந்தவமுடைய சத்திபதிமேலே
நாதாந்தப்பெருவெளியி னடுவெளியின்கீழே
நீலநிருநெருப்பாறு மயிரப்பாலத்தப்பால்
நிறைந்தபரிபூரணமாய் நிஷ்களமதாகிச்
சீலமிருந்தவமுடையோ ரிருதயமேதானாய்ச்
சிறந்துநின்றபரமகுரு சீர்பாதந்துணையே. (௧)

வாசிமார்க்கநிலை.

பாகமெனும்வாசிதனை யறியவேண்டி
பத்தியுடன்மனோன்மணியைக் கண்டுபோற்றி
வேதமெனும்பொருளறிய வேண்டுமென்று
வேண்டினேனாகாந்த வேதத்தாயும்
நீதமுடன்வாராமதேவாவென்று
நிலைநிறுத்திமதியமூர்த்தம் நினைவாயீந்தாள்
போதமிகுமதியமூர்த்தங் கொண்டபோது
புத்தியுடன்பூசைவிதி புகலென்றேனே. (௨)

புகலென்றபோதில் மனோன்மணிதான்விந்து
பூரணமாய்மதியமூர்த்தம் புகட்டினாள்காண்
அகமென்றவசமதாவு முத்தியாச்சு
வம்பரத்தின் றரிசனமுமடுக்கலாச்சு
செகமென்றசிவமயமுந் தெளியலாச்சு
தேவாதிதேவனென்ற பேருமாச்சு
சுகமென்றபூசைவிதி தன்னாலந்தச்
சுத்தமுள்ளசத்தியைநான் றொழுதேன்பாரே. (௩)

தொழுதமுறையென்னவென்றாற் சத்திபூசைச்
சுருக்கமுடன்சொல்லுகிறே னன்றாய்க்கேளு
பழுதொன்றுமில்லாத அகாரதீட்சைப்
பத்திகொண்டுமண்டலமே செபித்தாயாகில்
அழுத்தமென்ற தேகமதுசித்தியாச்சு
ஆகாரவாக்கையதற் கழிவேயில்லை

நெ்முத்தமுள்ளசத்தியென்ற தேகங்காணும்
நிலைத்தபின்பு உயிர்சிவத்துக்குறுதிகேளே. (ச)

உறுதியென்ற சக்தியடாஉகாரதீட்சை
உள்ளுணர்ந்தமண்டலமே செபித்தாயாகிற்
மறுதியென்றவ சியதுக் குறுதியாச்சு
பாலகனேவாசியென்று லுயிர்தானப்பா
சேருதுகின்றவுட லுயிர்தா னிலைத்துதானால்
சாரமாயச்சித்துவெகு வாடலாகும்
சுருதிபொருளானதொரு குருவைக்காணச்
சொல்லுகிறேம்பூசைவிதி நன்றாய்க்காணே. (ரு)

காணுதற்கு னமென்ற மகாரபீடங்
கருணையுள்ளவட்டமடா விந்துவிந்து
ஊணுதற்குமகாரமென்றவிந்துதன்னை
உற்றுப்பாரோங்காரக கம்பமாகிப்
பேணுதற்குக்கம்பநுனி மேலையையா
பேரண்டமானதொருவன்னிவன்னி
தோணுதற்குவன்னியென்று லாயிரத்தெண்மலர்க்குள்
தொழிகுறிபோலமுர்தமதற்குள்ளேபாரோ. (சா)

உள்ளானமதியமுர்தந் தன்னைமைந்தா
ஒருபோதுபணவிடைதா னுள்ளேகொண்டால்
விள்[illegible]தேகமதிற்கழிவோயில்லை
வினைபானமுக்தேக முக்தியாச்சு
கொள்ளாய்லமந்திரமுஞ் சித்தியாச்சு
குருசுருதிமுடிவுபொருள் காணலாச்சு
தள்ளாதவஷ்டகர்மச் சித்தியாச்சு
தாயானசத்தியுட பூசைகேளே. (எ)

பூசைவிதி சக்கரம்.

கேளப்பாபூசைவிதிச் சக்ரஞ்சொல்வேன்
கிருபையுள்ளசக்கரந்தான் விந்துவிந்து
ஆளப்பாவிந்துவென்ற வளையத்துள்ளே
அருள்பெருகுமோங்கார வதனுட்போடு
நாளப்பாஓங்கார மதனுட்டானம்
நடுமையானசுழி யதனுட்போடு
தேளப்பாகொட்டுகல்போற் சக்ரமுமாச்சுச்
சிவாயகுருசக்கரத்துக் கின்னங்கேளே. (அ)

இன்னங்கேள் விந்துவென்ற வளையத்தின்மே
லிரவிமதிசுழினையென்ற வளையம்போடு

வன்னமென்றமுதல்வளைய மிதழ்தானெட்டு
மறுவளையம்டதினாறு மதின்மேலப்பா
சொன்னதொரு முப்பத்திரண்டுபோடு
தருவமுள்ளவிதழன்பத் தாறுமாச்சு
வின்னமில்லாக் கோட்டைநால்வாசலிட்டு
விலாசமுள்ளதேவதையை விள்ளக்கேளே (௬)

பூசைசெய்யுமார்க்கம்.

கேளப்பாமேல்வாசல் பிரமபீசங்
கெணிதமுள்ளகீழ்வாசல் மாலின்பீசம்
வாளப்பாவடவாசல் ருத்திரபீசம்
வளமானதெனவாசல் மயேசன்பீசம்
வேளப்பாசதாசிவன்போ லிருந்துகொண்டு
மேற்றிசையைநோக்கிச் சக்கரத்தைவைத்து
நாளப்பாதினம்பார்த்துப் பூசைசெய்ய
நல்லநாள்நினைத்தநாள் நன்மையாமே. (௰)

நன்மையுடன்பூசைசெய்ய மைந்தாகேளு
நலமாகச்சுகாசனமா யிருந்துகொண்டு
உண்மையுடன் விபூதியையுந் தளமாய்ப்பூசி
உரிமையுள்ள மேருவைமுன்னிறுத்திக்கொண்டு
தண்மையுடன்பலகாரம ரசவர்க்கங்கள்
சந்தனதாம்பூலமுடன் தயவாய்வைத்து
செம்மையுடன்தானிருந்து தியானம்பண்ணிச
சிவமானபாத்திறங்கை தன்னில்வேண்டே. (௧௧)

வேண்டியதோர் பாத்திரங்களனந்தமுண்டு
விசையொடுமூன்றும் பாத்திரந்தானுந்தான்காண்பார்
ஆண்டவனாமுதெடுத்து வுண்டானாயா
அதின்பிறகுசத்திமதி யமுர்தமுண்டாள்
தாண்டவத்திற் றில்லைநடவாடும்போது
சங்கரனார்நஞ்சமுதந் தானேகொண்டாற்
காண்டமென்ற கவண்டலந்தான்கபாலபீடங்
கயிலாசமேருவென்ற பீடந்தானே. (௧௨)

தானென்றபீடமென்றுங் கபாலமென்றுஞ்
சங்கையுள்ளசத்தியென்றும் பாத்திரமென்றும்
மானென்றமந்திரத்தின் பீடமென்றும்
மகாசத்தியான பாத்திரந்தானென்றும்
தேனென்றபாத்திரத்தின் பெருமைசொல்லச்
சிவனாலுமுடியாதுதேவிசத்தி

சோமென்ற குருவருளால்சொல்லக்கேளு
 கோடிமுடியாந் தங்கமென்றபாத்ரந்தானே. (கந)

பாத்திரத்தைத்தானறிந்து பக்தியாகப்
 பத்திகொண்டுயிடக்கரத்தில் வலக்கரத்தாற்பற்றி
நேத்திரத்தின்பாகமதாய்ச் சடத்தைவாங்கி
 நேர்மையுடன்றூன்றுலங்கி யம்மதுவைப்பூரிக
கோத்திரத்தின்குருவருளால் சிவ்வெனவேவாங்கிக்
 குருவானபதிநோக்கி அம்மெனவேபூசி
மாத்திரைதான்மயங்காமல் ரேசகபூரகமாய்
 மனதறிவாற்கும்பகத்தில் வாசிதனைப்பூட்டே. (கச)

வாசிதனைப்பூட்டியோர் மாத்திரையதினமேல்
 மார்க்கமுடன்கறிவர்க்க வகைபருந்தி
நேசமுடன்றூபமேற் றீபம்வைத்து
 நினைவாயத்தூபஞ்சாத்தி னுட்செலுத்திப்
பாசமுடன்பதியறிக்கப் பதியில்நின்றுற
 பரமகுருதீபவொளி டளீலெனவேதோன்றும்
நாசிமுனைமீதில் குருநாதனடிவாழும்
 நாதாந்தப்பேரொளியினண்மைபோலாமே. (கரு)

ஆமப்பாசிவாயகுரு சக்கரத்தைமைந்தா
 ஆருக்குஞ்சொல்லாதே யையாவையா
வாமப்பாலமதியமுர்த மறிந்தோர்க்கிவாய்
 மதிபறியாக்கிச்சகினுல் ளமாங்கேது
தாமப்பாதன்னுடலைத் தானேகண்டு
 தன்மையுடன்சிவாயகுருசக்கரத்தைவைத்து
நாமப்பாவென்றமொழி தனைநிறுத்திப்பூசை
 நன்றாகப்பூசிக்க நன்மைபெறலாமே (கசு).

பூசையில்கூடும்பெயர்கள்.

நன்மையுள்ளபூசையிலே மைந்தாமைந்தா
 நானீயுமல்லாது வேறேவேண்டாம
உண்மையுள்ள பெரியோர்கள்வந்தார்சேரு
 வுல்கமதிற்பலகூட்ட மாகாவாகா
தண்மையுள்ளசற்குருவின்பாதந்தன்னைத்
 தாரணியிலறியாதார் கோடாகோடி
வண்மைபெறச் சாஸ்திரத்தைப்பாடம்பண்ணி
 வசனிப்பார்தெரிந்தவர்போல் மைந்தாபாரே. (கஎ)

பாரப்பாபயனறிபார் கோடாகோடிப்
 பலநூலும்பார்த்துமதி யறியார்கோடி

நேரப்பா நிலையறிந்து நில்லார்கோடி
நிட்டோமானமன முடையோர்கோடி
வீரப்பா கொண்டுமன தறியார்கோடி
வேசையின்மே லாசைகொண்ட வீணர்கோடி
காரப்பாலகிரிகொண்டு லகிரிதனையறியார்
காசினியில் மெத்தவுண்டு கண்டுதேறே. (௰௮)

தேறுதசித்தரிடம் பேசவேண்டாம்
ஜெபதபங்களறியாரைச் சேர்க்கவேண்டாம்
கூறுதசொற்களைத்தான் கூவிக்கூவிக்
குணமறியான்மணமறியான் குருட்டுமோடு
போராசைதான்பிடித்துப் பேய்போலோடிப்
பேய்க்கூற்றாய்த்திரிவாரையடுக்கவேண்டாம்
ஆறானதில்லறமே சத்தியென்று
அமர்ந்திருப்பான்கோடியினி லொருவன்றானே. (௰௯)

ஒருவனடா கோடியிலே ஒருவனுண்டு
உலகத்தோடொற்று மனசறிரொப்பிற்பான்
சிறுவனடா வறுமையிலே சென்றேகிற்பான்
சித்துமிகுத்துடையவன்றா னவனேயாகுங்
குருமொழியைமறவாதான் குருவேயாகுங்
குண்டலியினந்தியொலி கூறுவான்பார
திருவிருந்தப்பதியறிந்து வாலைபூசை
செவ்வையாய்ச்செய்தவனே சித்தனாமே. (௨௰)

மானதவாலைபூசை,

சித்தமென்றபெரியோர்கள் பூசைமார்க்கம்
செப்பினார்வெகுசோலி யாகமைந்தா
பத்திகொண்டபூசைவிதி நன்றாய்ச்சொன்னேன்
பக்குவத்தைச்சித்தர்கள்தா னறிந்துகொண்டு
சுத்தமுடன்சூட்சமதாய் வாலைபூசைச்
சொன்னவன்றான்றேவனடா வென்றுபேசிப்
புத்தியுடன்கண்டவர்தா னடக்கமபண்ணிப்
பூரணமாங்கைதனிலே வைத்திட்டாரே. (௨௧)

வைத்திட்டவிதங்கண்டு நான்தான்சென்று
மலைதோறுஞ்சித்தரிடங் கண்டுபேசிக்
கைத்திட்டமானதொரு வாலைபூசைக்
கருவானநூல்வாங்கி நல்லோர்க்கீபங்கேன்
பொய்த்திட்டமனதோர்க்கு யிந்நூல்கிட்டிப்
பூரணமாய்மனதால நிற்யானப்பா

மெய்க்கிட்டமானதொரு ராமவாக்யம்
மேலானவாக்யமென்று பணிக்கிட்டாரே. (உஉ)

பணிக்கிட்டமானகமா வாலைபூசைப்
பக்குவத்தைச்சொல்லுகிறேன் பண்புள்ளோர்க்குக்
கணிக்கிட்டமனதான கனிவால்மைந்தா
காருணையுள்ளபூரணத்தைக்கருத்திலேந்தி
அணிக்கிட்டரேசகத்தால் கும்பகத்தைப்பற்றி
அப்பனேபூரணத்தைப் பூசிப்பூரி
தணிக்கிட்டமூலமதில் வாசிகொண்டு
தானிருந்தித்தீபவொளி கான்தானுமே. (உங)

ஆமப்பாமானதமாம் பூசைதன்னை
ஆர்செய்வார்சித்தாதி சித்தன்செய்வான்
காமப்பால்மதமீறி நேசமுற்றக்
கன்மிகள்தான்செய்தாக்கா லழிந்துபோவான்
வாமப்பால்வாமதனுத மகிழுவார்தன்னை
மகத்தானகுருவென்றே மகிழ்ந்துநில்லு
தானப்பாதன்தேகஞ் சுத்திபண்ணிச்
சதாசிவன்மேல்சிந்தைதபசாய்த் தானேநில்லே. (உச)

நில்லென்றலகிரியிலே யனந்தமுண்டு
நேர்மையுள்ளலகிரியடா நாதம்நாதம்
கோல்லென்றால்வெளிதோன்றச் சொல்லலாகா
சொல்லற்றமவுனமதா யிருக்கவேண்டும்
வில்லென்றவிசையுடைய மனத்தோர்க்கையா
விளம்புகிறேன்ரகசியமாய் விளம்புறேன்யான்
கல்லென்றலகிரிபொன்று சஞ்சாவொன்று
கனமானமந்திரமாஞ் சாக்கதொன்றே (உரு)

ஒன்றானபூரணமா மாதிவஸ்து
ஓங்கோங்காவிதுநாலும் பிர்மகற்பம்
நன்றானாலினி விபரங்கேளு
நலமானவாரணிக்கும் மூலிகைதான்பெரிது
நின்று மூலிககைக்கு மந்திரந்தான்பெரிது.
நேர்மையுள்ளமந்திரத்துக் கதிகங்கேளு
குன்றுதபூரணமா மாதியாதி
குருவானவாதிவாதிவஸ்துக் கதிகங்காணே (உசு)

காணுதபூரணமாம் வஸ்துதன்னைக்
கடிசினியிலாரறியப் போறாரையா

பேணுமலுலகத்தோர் மாண்டுபோனார்
பிலமானவஸ்துவடா யேகவிந்து
தோணுதசத்தமடா தொனிக்கும்வஸ்து
துருவமுள்ளமேருவடா கண்டவஸ்து
பூணகபொருளுடைய பூரணமாம்வஸ்து
பூரணமாய்நின்றிலங்கும் பூரணமதாமே. (உஎ)

வாரணி குணம்.

தாமப்பாதாயினிட பருவஞ்சொன்னேன்
தன்மையுடன் பூசிக்கக்காலங்கேளு
நாமப்பாசொல்லுகிறேன் முதயகாலம்
நன்றாகவாரணியை யிறக்கிமைந்தா
வாமப்பால்மதியான வமுர்தமென்று
வணக்கமுடன் பாலதனைகையிற்கொண்டு
காமப்பால்தனக்குமொரு சுத்திகேளு
கனிவானமுப்பழமு மிதற்காம்பாரே. (உஅ)

பாரப்பாபழமறிந்துப் பாலைக்கொள்ள
பருவமுள்ளவாலைத்தாய் பாதங்காணும்
நேரப்பாநின்றவளு மகனேயென்று
நினைவாகச்சரிதைவழி நன்றாய்ச்சொல்லி
காரப்பாசரிதைவழி நன்றாய்க்கார்த்தால்
கனமானசாலோக பதவிகாணும்
ஆரப்பவறியார்கள் சாலோகபதவி
யரகாரவப்பதவி முத்தியாமே. (உகூ)

முத்தியுள்ளவாரணியின் குணத்தைச்சொன்னேன்
மூர்க்கமுடன்பூசிக்கக் காலஞ்சொன்னேன்
சித்திபெறமூலியொடு தியானஞ்சொன்னேன்
சிவசிவாமுப்பதவித் திறமுஞ்சொன்னேன்
புத்தியுள்ளநாதாக்கள் மறைப்புஞ்சொன்னேன்
பூரணமாய்நின்றிலங்கும் வாசிசொன்னேன்
பத்திகொண்டுநின்றவர்க்குப் பலிக்குஞ்சித்தி
பலியாதுநினைவறியாப் பாவிமாரே. (௩௰)

மாரானமூலிகையை வாங்கிமைந்தா
வணக்கமுடன்விளாக்காயைபிதுக்கிநன்றாய்
நேரானநேரமடா வுச்சிநேரம்
நேர்மையுள்ளமூலிகையை வைத்துக்கொண்டு
சீராகமதியமதிற் பூசைசெய்யக்
குணமாகச்சக்களாயைக் கலந்துக்கொண்டு

சிராகமதியமதிற் பூசைசெய்யத்
தேவியெனும் புவனைசதந்திரக்கமாமே. (௩௧)

மூலிகைக் குணம்.

தீர்க்கமுள்ளபுவனையவள் முன்னேநின்று
செவ்வையுடனென்மகனே செப்பக்கேளு
மார்க்கமுள்ள மூலிகைக்குக்கிரியைசுத்தி
மகத்தானகிரிகையிலே மனதுதோய்ந்தால்
ஆர்க்கும்சிகரில்லாத வறிவேதங்கும்
அந்தரியுஞ்சாமீப வருளைக்காட்டும்
பார்க்கின்றபலசமய நூலைப்பார்க்கப்
பத்திகொண்டுநின்றறிவு பதியுந்தானே- (௩௨)

தானென்றமூலிகையின் விபாஞ்சொன்னேன்
தாயானமனோன்மணிதன் றவத்தினாலே
தேனென்றமந்திரமா மமுர்தந்தன்னைத்
தெகுட்டாதவமுர்தமதைத் தெளிவாய்வாங்கி
பானென்றபாலமுர்தந் தனக்குமைந்தா
பக்குவமாஞ்சுத்திதனைப் பகரக்கேளு
கோனென்றபாத்திரந்தான் சுத்திசுத்திக்
குருவானபாத்திரத்தைக்கரத்தில்வேண்டே (௩௩)

மந்திரத்தின்குணம்

வேண்டியந்தப்பாத்திரத்தி லமுர்தம்விட்டு
விபரமுடன்மாலையிலே பூசைபண்ணி
ஆண்டவனார்பதிநோக்கித் தியானஞ்செய்து
அருள்பெருகுவர்க்கவகை யமுதுகொண்டு
பூண்டமனதுறுதியினால் ரேசகமேசெய்து
பூரணமாய்க்கும்பகத்திற் பூரணமாய்நின்றால்
தாண்டவத்திற்சிவனைவென்ற திரிபுரைதான்வந்து
தண்மையுள்ளகண்மணியென் றருள்செய்வாளே. (௩௪)

அருளீயந்தயோகத்துக் கறிவுஞ்சொல்லி
அருமையுடன்பூரணத்தி லறிவாய்நின்றால்
திருவிருந்தபதியானசாரூபபதவி
சிவசிவாசீக்கிரத்தில் சித்தியாகும்
மருவிருந்தமவுனமடா மனோன்மணியின்வீடு
மார்க்கமுடன்பண்டுதவும் யோகஞ்செய்வார்
குருவிருந்தபதிநோக்கித் தவமேசெய்தால்
கூடுறுதிபாகுமடா குருவைக்காரோ- (௩௫)

பூரணத்தின் குணம்

காரப்பா மந்திரத்தின் மகிமைசொன்னேன்
காசினியிலிந்நூலைக் காட்டவேண்டாம்
வீரப்பா செய்வோரை யடுக்கவேண்டாம்
வேதாந்தமறியாரைச் சேர்க்கவேண்டாம்
தேரப்பா லனந்தேறித் தெளிவாலல்லு
தெளிவான பூரணத்தின் செய்கைகேளு
ஆரப்பா யறிவார்கள் பூரணத்தின்செய்கை
யாகரா குருவருளா லறிவிப்பேனே. (௫௬)

அண்டபிண்டசமாதிவைப்புமெழுகு

அறிவானபொருளாகு மண்டபிண்ட
மமைந்தகருப்பிண்டமதி னண்டந்தன்னைக்
குறியானதொகேகுறிபோ லண்டம்வாங்கிக்
கூர்மையுடன்மேலோட்டைச் சீவிப்போட்டுப்
பரியானவண்டமென்ற யிளநீர் தன்னைப்
பக்குவமாய்க்கண் திறந்து ரவிபீசஞ்செலுத்தி
திருவானவெடியுப்பைப் பாண்டமதிலிட்டுத்
தெகட்டாதபண்டமதை யதன்மேல்வையே. (௫௭)

வைத்துமேலுப்பிட்டு மேற்சட்டிமூடி
மார்க்கமுடன்சீலைசுத்தி மண்பூசிமைந்தா
கைத்திட்டமாகவே சமாதிதனில்வைப்பாய்க்
களமாகநீயிருக்கு மொடுக்கமதுதனிலே
மெய்த்திட்டமாகவே மண்டலமேசென்றால்
மேன்மைபெறச்சமாதிதனை விரும்பிமிகத்திறந்து
மைத்திட்டமாகவே பானைதனிலண்ட
மார்க்கமுடனண்டமதை யனதறிவால்வாங்கே. (௫௮)

வாங்கியந்தவண்டத்தின் கருவைநீயு
மகத்தான்பீங்கானில் விட்டுமைந்தா
பாங்குபெறரவிதனிலே வைத்துக்காரு
பக்குவமாய்ப்பின்னுமதில் ரவிபீசஞ்சேரு
தீங்கில்லாக்கரியுப்புநாலி லொன்றுபொடித்துச்
செவ்வையுடன்பூரணத்திற்சேர்த்துமிகநன்றாய்ப்
தீங்காதரவிதனிலே காயமிகப்போடு
தன்மையுடன்காய்ந்துநன்றாய் மெழுகாகுமாமே. (௫௯)

ஆமப்பா மெழுகெடுத்தும் பதனமாக
அன்பாகமேருதனி லடக்கம்பண்ணி

காமப்பொயெவ்வேளை அவ்வேளை தன்னிற்
    நயவாகமனதறிவால்தா னிருந்துகொண்டு
காமப்பாசொல்லுகிறோம் மேருவைமுன்னிறுத்தி
    நன்மையுடன்மானதமாம் பூசையதுசெயது
காமப்பாலானபரி பூரணமேயென்று
    காயாதிகற்பமென்று துணிந்துமனம்போற்றே. (௬௰)

போற்றுவதுபூரணமே யேகவஸ்து
    பொருளான அருவுருவேயென்றுபோற்றி
காற்றிசையுமெனையாண்டுக் கொள்ளவந்த
    காரணியேகவுமாரி நாதாந்தத்தில்
தேற்றியேமனந்தேற்றித் தெளிவாய்நீயுஞ்
    சிந்தைமனதொன்றாக வெனையாட்கொண்டு
காத்தருளவேண்டுமென்று மைந்தாநீயுங்
    கருணையுள்ளபூரணத்திற் பணிவிடைதானெடுமே. (௬௧)

எடுத்திடுக்கையைவைத்து வலக்கரதகால்மூடி
    யேகபரிபூரணியேயென்றுபோற்றி
அடுத்தமனைச்சுழிமுனையில் மனதைநாட்டி
    யன்பாகரேசகபூரகமுஞ்செய்து
தொடுத்தமனதறிவாலே வாசிபூட்டித்
    தொடுகுறிபோற்குப்பகத்தி லிருந்துகொண்டு
கொடுத்துவிநோவின்மேற் பூரணத்தைமைந்தா
    கும்மெனவேவாய்மூடி யிருந்துமிகப்பாரே. (௬௨)

பாரப்பாநீயிருந்து நாவுதனிலமுர்தம்
    பாயுமடாவங்கமுர்தம் பசிதீரவுண்ணு
ஆரப்பாவுனக்கிடுசொல்லப்போறேன்
    அரகராதேவாதி தேவனுக்கும்
சேரப்பாகுருவருளால் மனோன்மணிதான்வந்து
    சிலசிறுகதிஞானபதம் நன்றாய்ச்சொல்லி
பேரப்பாநீபெற பேர்தானென்று
    பெருமையொசாயுச்சிய பதவிபருள்வாளே. (௬௩)

கட்டுக்கொடி கருவித்தை

வாளப்பாசாயுச்சிய பதவிதனைமைந்தா
    வரிசையுடநால்பதமும் நன்றாய்ச்சொன்னோம்
ஆளப்பாநால்பதமுமாண்டவர்களாரு
    அருமையுள்ளசித்தரிலே கோடிக்கொன்று
மேலப்பாலோகமுடன் கீழுலகம்ரெண்டில்
    விபரமுடன்வாழுமுயிர் பயிர்கட்கெல்லாம்

கேளப்பாசெய்யாத வசியமொன்றுசொல்வேன்
கூற்புத்தின்மேற்கட்டுக் கொடியதனைவாங்கே. (௪௪)

வாங்கியந்தக்கொடியதனை யுலரப்போட்டு
மார்க்கமுடன்கருக்கினன்றாயெடுத்துக்கொண்டு
தீங்கில்லாவெடியுப்பு கர்ப்பூரஞ்சீனந்
தெகட்டாதயிந்துப்பு சரியுப்புங்கூட்டி
பாங்குபெறவஞ்சுப்புந் தண்ணீர்விட்டுப்
பக்குவமாயறைத்துருட்டி வட்டுப்பண்ணி
ஆங்கதைகொண்டேபெருவிற் புடத்தைப்போடு
அப்பனேதீப்பிடித்துக் கருகுந்தானே. (௪௫)

கருகின்றகரிக்குநீ காய்க்கறியுங்கூட்டிக்
கல்வமதில்பழச்சாற்றால் நன்றாயாட்ட
உரிகின்றமெழுகதுபோல் மையுமாகும்
உண்மையில்லாமைதனைச் சிமிளில்வைத்து
பெருகின்றமையெடுத்துத் திலர்தம்போட்டுப்
பேருலகிற்சென்றுவாமைந்தாமைந்தா
தருகின்றவுயிர்ப்பயிர்கள் வணக்கமாகித்
தன்பதமேகெதியெனவே சார்வார்பாரே. (௪௬)

பாரப்பாவசியமொன்று சொன்னேனிந்தப்
பக்குவத்தையொருவருக்கும் பகரவேண்டாம்
தேரப்பாமனந்தேறி வசியம்பூண்டு
செவ்வையொடு தவசிருப்பாய்ச்சிவனேயென்று
காரப்பாபெரியோரைத் தொண்டுபண்ணிக்
காசினியில்நன்மையுள்ள நாட்டமாய்நில்
பேரப்பா தேவாதிதேவனென்பார்
பெருமையுள்ள வஞ்சனத்தின்வகையைக்கேளே. (௪௭)

அஞ்சனம்.

சேளப்பாவரிதாரக் கட்டிவாங்கிக்
கிருபையுள்ளகல்லுப்புஞ் சருகுங்கூட்டி
மாளப்பாகல்வமதி லாட்டிப்பில்லை
மார்க்கமுடன் தான்பிடித்துக்காயப்போடு
கோளப்பாவில்லாமற் புடத்தில்நன்றாய்க்
கூர்மையுடன் கருக்கியதையெடுத்துக்கொண்டு
தேளப்பாயோண்டத் தெண்ணெய்விட்டு
தெள்ளிவாகமத்திக்க மையமாய்ப்போமே. (௪௮)

மையானவஞ்சனத்துக் கிதுவேமூலம்
மார்க்கமுடனஞ்சன தேவிதன்னை

மெய்யாகவவன்பகத்தைப் பணிந்துக்கொண்டு
மேன்மைபெறச் சிமிள்தனிலேயடக்கம்பண்ணி
கையாகவமச்சிமிளைத் திறந்துபாரு
கண்கரிக்துநீர்விழுந்து திறக்குங்கைதான்
எய்யாதபாதாளந் துலேதானேடும்
என்மகனேயிதில்நிதிகள் காணலாமே. (சசு)

காணுவதுவெகுநிதிகள் கண்டாயானல்
கண்ணிமையாற்பாராதே கடக்கநில்லு
பேணுவதுயெந்தநிதி யென்ருபாகிற்
பேரொளியாந்தீபவொளி பேணித்தேடு
தோணுவது சுருபநிலை யதுதானப்பா
சுருபமென்றுலாசறிவார் சோதிசோதி
ஊணுவதவுடல்பொருளோ டாவிமூன்று
முற்றுப்பார்வெட்டவெளி யாகுந்தானே. (ருய)

தானென்தசரிகைமுதல் ஞானவகைசொன்னேம்
சமரசமாய்த்தேகவச்சிரக் காயஞ்சொன்னேம்
கோனென்றகுருவருளால் தவமகிமைசொன்னேம்
கூர்மையுள்ளதவமதுக்கு நிஷ்டைசொன்னேம்
மானென்றநிஷ்டைதனைக் குறுதியான
மகத்துவமாந்தெரிசனத்தை வழுத்தக்கேளு
தேனென்றபிரிதிவா மதனேடொக்கத்
தெகட்டாதவமுர்தமென்று பூரமாமே, (ருக)

வாகைகளிம்பு

பூரமுடன்லிங்கமென்ற தேய்வுசேரு
புகழாகவாயுவென்ற நாகஞ்சேரு
வாரவென்றநாலுடனே மாயிநாத
மார்க்கமுள்ளதுருசுடனே வுப்புங்கூட்டிய்
பாரமென்றுமனதிலெண்ணி யேழுக்கூட்டிப்
பக்குவமாய்க்கலங்மதிற் பழச்சார்விட்டு
காரமென்றசாரமதை விட்டேயாட்டிக்
களிம்பானபருவமதிற்சிமிளில்வையே (ருஉ)

வையப்பாசிமிளில்வைத்த களிம்புதன்னே
மார்க்கமுடன் பணவிடைதானெடுத்துக்கொண்டு
வெய்யப்பாகளஞ்சிவெள்ளித்தகட்டிற்பூசி
விருப்பமுடனேட்டில்வைத்துச் சிலேசெய்து
நையப்பாவெருவடக்கிப் புடத்தைப்போடு
நன்ருகச்சற்குருவைத் தொழுதுநில்லு

ையப்பாபடமாறி யெடுத்துப்பாரு
பழுத்துமிகப்பதினாறு வயதாம்பாரே (௫௩)

வேதைமார்க்கம்.

பாரப்பாசெம்பிலிலே தடவிநல்ல
பக்குவமாய்ப்புடம்போடப் பழுக்குமப்பா
நீரப்பாகுடவனைத்தான்றகடாய்த்தட்டி
நேர்மையுள்ளமருந்ததனைத் தடவிக்காய்ச்ச
ஆரப்பாவறியார்கள் குடவன்மாற்று
ஆறுவயதானதொரு பொன்னாகும்
தேரப்பாமனந்தேறி யோகம்பாரு
சிவசிவாசிவயோக முத்தியாமே. (௫௪)

முத்தியுள்ளதவமகிமைக் குறுதியென்ன
முதலானயோகமடா சிவயோகந்தான்
பத்திகொண்டுபார்த்தவனே சித்தன்சித்தன்
பரமசிவயோகமதைப் பாரார்தானும்
அத்தியென்றதேகமது வழிந்துபோகும்
அழிந்தாலுமோட்சநிலை யறியமாட்டார்
சித்தமெந்தன்பாக்யமென்று சிவயோகத்தைத்
தேர்ந்தவனேசிவயோகி யாகுந்தானே. (௫௫)

சிவயோகப்பெருமை.

தானேதான்சிவயோகஞ் செய்யவேண்டுந்
தன்மையுள்ளபெரியோரைப் பணியவேண்டும்
வீணேதானறிந்ததினாலேதுண்டப்பா
வீண்பேச்சாய்த்திரிவாரை யடுக்கவேண்டாம்
தூணேதான்றும்பானாற் றுரும்புதானுஞ்
சொல்லுவார்பெரியோர்கள் பழமையாகும்
பூணேநீசிவயோகம் பூண்டால்தேகம்
பொன்றுரும்புபோலதேகம் புதுமையாமே. (௫௬)

ஆமப்பாதேகத்துக் குறுதியென்ன
அருளானகாயாதிகாப்பங் கர்ப்பம்
தாமப்பாகாயாதி கர்ப்பங்கொண்டால்
தவமானதவப்பலந்தானதுவேயாகும்
போமப்பாவபமிருத்து வெங்கேபோச்சு
புத்திகொண்டபூரணத்தி லொடுங்கிப்போச்சு
நாமப்பாவென்றபத மெங்கேபோச்சு
நந்தியென்றதீய்ப்பிடித்து நசித்துப்போச்சே. (௫௭)

போச்சப்பாவங்கியென்ற செந்தீப்பட்டுப்
பேறிந்துங்கா தினையும் பொடித்துப்போச்சு
மூச்சப்பாவடக்கிகின்றவண்டங்கன்னில்
முனையானசுழிமுனைமேற் றீபந்தோணறுங்
காச்சப்பாவத்தீபந் தன்னிற்றேகங்
காச்சினால்தேகமதில் கசடுபோகும்
ஆச்சப்பாவக்கசடு கண்டுதானால்
அம்பரத்தின்தெரிசனத்தி லடுக்கலாமே. (௫௮)

சாஸ்திரவிபரம்.

அடுக்காகவாயிரத்தை யடுத்துப்பாரு
வதின்பிறகுபலதிரட்டை யறிந்துபாரு
முடுக்கானவினோதவகை நூறும்பாரு
மூர்க்கமுள்ளவயித்தியத்தை முழுதும்பாரு
ஒடுக்கமுள்ளபலபாஷை யுறுதிபாரு
வுண்மையுள்ளசோசியமாம் பத்தும்பாரு
திடுக்கமுள்ளமனதொடுங்க ராமர்வாக்யஞ்
செப்பினசொற்றவாராமற் றேர்ந்துபாரோ. (௫௯)

பாரப்பாநாம்சொன்ன வாக்யந்தன்னிற்
பழுதொன்றும்வராமற் பற்றிப்பார்க்க
நேரப்பாசிவலோக மார்க்கஞ்சொன்னேன்
நெறியானநூல்தேடி நினைவாய்ப்பாரு
தேரப்பாமனந்தேறுந் தேகந்தேறுஞ்
சிவசிவாவாசியதற் குறுதிதோன்றும்
வீரப்பாகொண்டுதலை தறிக்குமாந்தர்
வீணருடன்பேசாதே விண்ணைப்பாரோ. (௬௰)

தன்னைத்தானறிதல்.

விண்ணைப்பார்தன்னைப்பார் மண்ணைப்பாரு
மேன்மைபெறக்குருவருளை மேவிப்பாரு
பெண்ணைப்பார்த்தலையாதே பெண்டான்றேகம்
பிரியமுடன்றேகமதைப் பேணிப்பார்த்தால்
கண்ணப்பாதுலக்குமடா வந்தக்கண்ணாற்
காணலாஞ்சித்துவெகு கண்ணிற்காணும்
மண்ணப்பாவென்றுசடந் தன்னைப்பேணு
மாந்தருக்குயென்னவரு மண்தானுமே. (௬௧)

ஆமப்பாமண்ணான பிரிதிவினாலே
அநேகவஸ்துவுண்டாச்சு அதேதென்றாக்கால்

வாம்ப்பால்மதியமுர்தந் தன்னாலந்த
மகத்தானவாகாயஞ் சிவமுமாச்சு
நாமப்பாசொல்லுகிறோம் மண்ணும்விண்ணும்
நலமாதிவாதியந்தஞ் சத்திசிவமாச்சு
தாமப்பாகுருவருளால் சத்திசிவந்தன்னைத்
தாரணியிற்கண்டவனே தவசியாமே. (௬௨)

ஆமென்றதவமுறுதிக்கின்னமொன்று
அன்பாகச்சொல்லுகிறோம் நன்றாய்க்கேளும்
நாமென்றசொல்லகத்திப் பூபிநாதம்
நன்றானநாதமடா சத்தசத்தி
தாமென்றபிரிதிவாந் தன்னோடொக்கத்
தயவானகெவுரியுடன் சிலையுங்கூட்டி
ஊமென்றநாகாரசங் கூடச்சேர்த்து
ஓர்நிறையாய்க் கலவத்தில்நன்றாயாட்டே. (௬௩)

ஆட்டுவதுசமபழத்தின்சாறாலாட்டி
மப்பனேகெட்டடங்க நன்றாயாட்டிக்
கூட்டுமதுஒன்றாக்கி வட்டுப்பண்ணிக்
குண்டலமாஞ்சட்டிதனில் நடுவேவைத்துப்
பூட்டுவதுதாம்பரத்தின் கிண்ணிதன்னால்
பொருந்தவேமூடிநன்றாய் மணலும்போட்டுத்
தாட்டிகமாய்த்தீயெரித்துப் பதத்தைப்பாரு
தயவானபதமதுவைச் சொல்லுவேனே. (௬௪)

வேதைமார்க்கம் கூடறுவது,

சொல்லுவேன்சொரிந்தமணல் கருகிற்றால்
சுத்தமுள்ளயக்குவமென் றெடுத்துக்கொண்டு
வெல்லுவேனிதற்கிரட்டி தாம்பரத்தை
விசையாகவுருக்கியந்த மைமைத்தானும்
நல்லுவெணுருக்குமுகந் தன்னிலிய
நாற்றமுள்ளசெப்பதுவுங் கட்டிப்போச்சு
சொல்லுவேனென்றுசொல்லிவெள்ளிபொன்னில்
குற்றமற்றசெம்புமூன் றொன்றாய்க்கூட்டே. (௬௫)

கூட்டிநன்றாய்க்குகைதனிலே யுருக்கிப்பாரு
குருவானகுருவருளால் மாற்றெட்டாகும்
தாட்டிகமாய்ப் பத்திலொன்று தங்கஞ்சேர்க்கத்
தயவானதங்கமடாயென்னசொல்வேன்
பூட்டானபூட்டருக்குஞ் சத்திசிவந்தன்னைப்
பூரணமாய்க்கண்டுமன தறிவாய்நின்றால்

தீட்டிமுனைமழுங்காத சுழிமுனையின்முன்னே
திருவான அறிவுரு தீபவொளியாமே. (சுசு)

ஆமப்பாயின்னமொன்று சருவைக்கேளு
ஆதியென்றலிங்கமுடன் துருசுங்கூட்டித்
தாமப்மாகண்டிடைக்கு ஆதிசேர்த்துச்
சம்பழத்தின்சாறதிலும் கலவத்தாட்டி
நாமப்பாசொன்னபடி வட்டுபண்ணி
நன்மைபெறமணல்மறவிற புடத்தைப்போடு
சாமப்பாசரக்குவகை மூன்றுதானுஞ்
சமரசமாய்க்கட்டியது திட்டமாமே. (சுஎ)

திட்டமுடன்பகமாறி பெடுத்துக்கொண்டு
செவ்வையுடன்செம்புருக்கி மருந்தையீவாய்
இட்டமுடன்செம்பிடைக்கு செட்டியீவா
யிருண்டசெம்புகட்டியது யிருகிற்கும்
பட்டசெம்புநாலுடனே வெள்ளியாகும்
பக்குவமாயுருகிப்பார் மாற்றுமாகும்
நட்டமென்னபத்திலொன்று தங்கஞ்சேர்க்க
நயமாகயெட்டுவயதாகும்பாரே. (சுஅ)

வெள்ளி வித்தை.

பாரப்பாபிரிதீவின் கடாட்சத்தாலே
பக்குவமாய்வெகுதொழில்க ளாடலாகும்
தேரப்பாமனந்தேறி வெள்ளிவித்தைச்
செவ்வைபாய்ச்சொல்லுகிறேம் நன்மையாக
நீரப்பாநிறைந்துநின்ற வெள்ளீயத்தில்
நினைவாகவந்திருக்கும் ரசத்தைத்தாக்கி
சேரப்பாயதற்குநிகர் பாஷாணத்தைச்
சேர்த்துநன்றாய்ப்பிரிநீவைச் சேர்த்துக்கொள்ளே. (சுகூ)

சேர்த்துநன்றாய்க்கல்வத்தில் பழச்சாற்றைவிட்டுச்
செவ்வையாய்த்தானரைத்து வட்டுபண்ணிப்
போற்றிநன்றாய்மண்மறைவிற் புடத்தைப்போடு
போக்கானநற்சரக்குங்கட்டிப்போகும்
பார்த்திபனேயதையெடுத்து வைத்துக்கொண்டு
பதிவாகச்செம்புருக்கி யதனிற்றூக்கு
நாற்றிசையுமெய்க்கவேதான் வெளுத்துப்போகும்
நன்றாகப்பத்திலொன்று வெள்ளிசேரே. (எ0)

சேர்த்துருக்கிப்பார்க்கவெள்ளி மாற்றுத்தானும்
செவ்வையுடன் பத்துமாற்றாகுமப்பா

பார்த்திபனேயிவ்வேதை பத்திப்பார்த்தா
பத்திகொண்டுயோகமதில் பதிவாய்நில்லு
சார்த்தருளவேண்டுமென்று குருவைக்காரு
சருவானமதியமுர்த மூள்ளேகொள்ளு
பூர்த்தமலர்வாசனைபோல் யோகநிஷ்டை
புரிதமுடனுசனமும் புகலக்கேளே. (எக)

நிஷ்டைவிபரம்.

கேளப்பாநிஷ்டையிட விபரந்தன்னைக்
கெணிதமுள்ளபிர்ம்மநிஷ்டை மாலிநிஷ்டை
கோளப்பாயில்லாத ருத்திரநிஷ்டை
குருவானமயேஸ்பரத்தி னிஷ்டைதானும்
ஆளப்பாசதாசிவத்தி னிஷ்டையோடே
ஐந்துநிஷ்டையர்குமதின் விபரக்கேளு
வாளப்பாபிர்மநிஷ்டை யேதென்றக்கால்
மார்க்கமுடன்சுகாசனமா யிருந்துக்கொள்ளே. (எஉ)

பிர்ம்மநிஷ்டை

இருந்துகொண்டுசுகாசனமா னமைந்தாநீயு
மின்பமுடன்ரேசகபூ ரகமும்பண்ணி
அருந்தவமாய்க்கும்பகத்தி லிருந்துக்கொண்டு
அசையாதமூலமதையன்பாய்ப்பார்த்தால்
திருவிருந்தமலர்க்கமல மீதிலேதான்
தேவனெனும்பிர்மத்தைத் தெரிசிப்பாய்பார்
குருவிருந்தகுண்டலியின் மூலமப்பா
குணமாகவம்மூலக் குறியாய்ப்பாரே. (எஉ)

மாலிநிஷ்டை.

குறியானபிர்மத்தி னிஷ்டைசொன்னேம்
குணமாகவதின்மேலே கூறக்கேளு
அறிவானமாலினிட நிஷடைதானும்
அப்பனேயஷ்டயோக மமைத்துக்கொண்டு
விரிவானரேச்சக பூரகமும்பண்ணி
மேலானகும்பகத்தில் வாசிபூட்டி
நெறியானபூரகத்தைபபார்த்தாயானால்
நிசமாகவிஷ்ணுபதம் நேரலாகும (எச)

உருத்திரநிஷ்டை

ஆமப்பாமாலினிட நிஷடைசொன்னேம்
அரகாருத்திரநிஷ்டை யருளக்கேளு
நாமப்பாசொல்லுகிறேம் பாதம்ரெண்டும்
நன்றாகவிசைபூட்டித் தொடைமேலேற்றித்

தாமப்பாரேசகபூ ரகமும்பண்ணித்
தன்மைபெறக் கும்பகத்தில்வாசிபூட்டி
வாமப்பால்மதிபெருகு மனாகதத்தை
மார்க்கமுடன்பார்த்ததினால் வளமைகேளே. (௭௫)

வளமையென்னசொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
மார்க்கமுள்ளருத்திரரை வளமாய்க்காண்பாய்
தளமைபெறருத்திரரைக் கண்டபோது
சகலசவுபாக்கியமுந் தானேதங்கும
இளமையுள்ளருத்திரநிஷ்டை சொன்னோமையா
ஏகாந்தமஷ்டபர னிஷ்டைகேளு
நலமைபெறக்குந்தவைத்து வலககால்தூக்கி
நன்றாகவிடக்கால்மேல் நயந்துபூட்டே (௭௬)

மயேஸ்பரநிஷ்டை

பூட்டியந்தயிரண்டும் நிலத்திற்றாக்கிப்
பூரணமாம்ரேசகபூ ரகமும்பண்ணித்
தாட்டிகமாய்க்கும்பகத்தில் வாசிபூட்டி
தயவாகவிசுத்திதனிலே தன்னைப்பார்த்தால்
நாட்டதிகமாக மயேஸ்பரனார்பாதம்
நன்றாகத்துலங்குமடா நயந்துபாரு
தேட்டானதெட்டுள்ளதா னென்னவென்றால்
சிவசிவாவைந்துநிஷ்டைத் திறமாய்த்தேடே. (௭௭)

சதாசிவநிஷ்டை.

திறமாகமயேஸ்பரத்தி நிஷ்டைசொன்னோம்
சிவசிவாசதாசிவத்தி னிஷ்டைகேளு
உறமாகவொட்டியாணம் பந்தம்பண்ணி
ஒருமையுடன்யோகதெண்டை யுட்கைசேர்த்து
நிறமாகவிபூதியுந் தளமாய்ப்பேசி
நேசமுடன்ரேசகபூ ரகமுஞ்செய்து
பரமானகும்பகத்தில் வாசிபூட் ப்
பத்திகொண்டு ஆக்கினையைப் பதியாய்ப்பாரே. (௭௮)

பார்க்கையிலேசதாசிவத்தின் பாதந்தோன்றும்
பதியானமனோன்மணிதா னமூர்தமீவாள்
தீர்க்கமுடனந்தமூர்தம் கொண்டபோது
சிவசிவாகயிலாயத் தேகமாறும்
மார்க்கமுள்ளமதிபமூர்தந் தன்னாற்றேகம்
மகத்தானதேகமடா பிர்மம்பிர்மம

ஆர்க்குமிந்தபிர்மபதங் கிடைக்குமோதான்
அருளானபூரணத்தா லமைக்கும்வாறே. (எசூ)

மதியமூர்த லேகியம்.

வாரானமதியமூர்த மொன்றுசொல்வேன்
மகத்தானவமூர்த லேகியந்தான்மைந்தா
பேரானவாணியோர் படிதான்வாங்கிப்
பிரியமுடனேந்துபலஞ் சர்க்கரைதான்சேர்த்து
கூராகவடுப்பேற்றித் தீயைமூட்டிக்
குணமாகப்பாகுவருஞ் சமையந்தன்னில்
சீராகச்சாதிக்காய் சாதிபத்திரி
திறமானகிராம்புமூன் றுென்றுல்வாங்கே (அ0)

வாங்கடாமுச்சரக்கு மூன்றுபலமாக
மைந்தனேயிதற்கிரண்டு மூலிகைதான்சேர்த்து
பாங்குபெறவிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு
பதிவாகச்சூரணமே செய்துமைந்தா
திங்கில்லாப்பாகுதனிற் றூவித்தூவித்
திறமாகக்கிண்டிவிடு மைந்தாமைந்தா
ஆங்கதிகொண்டேயிருகிப் போனுற்பின்னு
மப்பனேசர்க்கரையைச் சேர்த்துக்கிண்டே. (அக)

கிண்டியந்தலேகியத்தைப் பதனமாகக்
கிருபையுடன்பரணிதனி லடக்கம்பண்ணி
கொண்டதொருலேகியதில் பணவிடைத்தான்
குறிப்பாகத்தானெடுத்து வைத்துக்கொண்டு
அண்டர்பிரானருள்பெருக புயத்தைப்போற்றி
யன்பாகப்பூசித்து லேகியத்தைமைந்தா
கின்றுடும்நாவினில்வைத் தமூர்தங்கொண்டு
கினைவாகரேசக பூரகமும்பண்ணே. (அஉ)

பண்ணப்பாகும்பகத்தில் வாசிபூட்டிப்
பத்திகொண்டுகின்றதினுற் பலிக்குஞ்சித்தி
விண்ணப்பாதான்றுலங்கி விண்ணிலேதான்
விதமாகத்தீபவொளி கண்ணிற்காணும்
கண்ணப்பாவத்தீபந் தன்னைமைந்தா
நயமாகக்காயுமதி லுறுதியாகும்
கண்ணப்பாகாலுடனே செவ்வையானல்
கைலாயம்வைகுந்தங் காணலாமே. (அங)

வல்லாரை கர்ப்பம்.

காணவேயின்னமொரு கர்ப்பஞ்சொல்வேன்
கருவானவல்லாரை யார்காண்பார்கள்

தோண வல்லாரை சொல்லக்கேளு
தொல்லுலகில்மற்றகரு சொல்லப்போமே
பேணவேகுருவருளால் சொல்வேனப்பா
பிண்டமடாவமைத்தமுத லருமைதம்
பூணவேயக்கருவை லாங்குச்சுற்குப்
பூரமுடன்வெல்லமகைப் புணர்ந்துபாரே. (அச)

பாரப்பாபூரமுடன் வெல்லம்ரெண்டும்
பக்குவமாயெருக்கம்பால தன்னாலாட்டி
சீரப்பாகுன்றுமணி யளவாய்ச்செய்து
திறமாகவொருவுண்டை மாதுக்கீய்ந்தால்
வீரப்பாசெய்பாமற் பிண்டந்தானும்
விதனமன்றிவிரும்புமிகவருகுமப்பா
நீரப்பாவமுரிதனில் பூரம்போட்டு
நினைவாகவல்லாரை யதனிற்போடே. (அரு)

போட்டுநன்றாய்நீர்வற்ற வெரிப்பாயப்பா
புகழாகநீர்வற்றி யவிந்துதென்றால்
தேட்டமுடனதையெடுத்துக் கலவத்திட்டுத்
திறமாகமைபபோலே யாட்டிக்கொண்டு
பூட்டுவாய்மிளகுடனே சாதிக்காயும்
பூவுடனேபதிரியு மேலவங்கூட்டி
ஆட்டுவாய்நெய்பாலே நன்றாய்மைந்தா
அரைத்தெடுத்துப் பரணிதனிலடக்கம்பண்ணே, (அசு)

பண்ணப்பாபரணிதனி லடக்கம்பண்ணி
பக்குவமாய்மேல்மூடிச் சீலைசெய்து
நண்ணப்பாகுழிவெட்டிப் புதைத்துப்போடு
நலமானமண்டலஞ்சென் றெடுத்துக்கொண்டு
திண்ணப்பாகுனறுமணி யள்வின்வீதம
திறமாகமண்டலமே கொண்டாயானால்
எண்ணப்பாநான்சொல்லப் போறேனையா
ஏகாந்தச்சிவயோகத் தியல்புதானே. (அஎ)

தானென்றகத்துவத்தை யறியவேண்டும்
தன்மையுள்ளபூரணத்தைக் காணவேண்டும்
ஊனென்றமதிப்பூர்தங் கொள்ளவேண்டும்
உகமையிலாச்சத்திசிவ பூசைவேண்டும்
நானென்றவாணவத்தை நிறுத்தவேண்டும்
நாதாந்தப்பேரொளியைக் காணவேண்டும்

வீணென்றவெறும்பேச்சாய்த் திரியவேண்டாம்
வேதாந்தக்கர்ப்பமொன்று சொல்லக்கேளே. (௮௮)

கடுக்காய லேகியம்.

சொல்லக்கேள்கடுக்காய் லேகியத்தைமைந்தா
சோதியென்றகடுக்காய் தானாகாண்பார்கள்
விள்ளக்கேள்பொற்கடுக்காய் சென்னித்தநாளில்
விபரமுடன்மற்ற கடுக்காயைவாங்கி
அள்ளக்கேளக்காயைத் தறித்துநல்ல
அப்புவினிற்றான்போட்டுப் பிசைந்திறுத்திக்
கொள்ளக்கேள்நீரெல்லாம் பிழிந்துநல்லக்
கூர்மையுள்ளவெய்யில்தனிலே காயப்போடே. (௮௯)

போட்டெடுத்துமறுபடியு முரலிற்றாக்கிப்
பொடியாகத்தானிடித்துத் தண்ணீர்விட்டுத்
தாட்டிகமாய்த்தான்பிசைந்து யிறுத்துப்போடு
தன்மையுடன்முன்போலே காயப்போட்டு
வாட்டியெடுபத்துமுறை யிந்தவிதமாக
மார்க்கமொடுசெய்ததினால் வளமையாகும்
தேட்டமுடனின்னமொரு சுத்திசொல்வோஞ்
சிவசிவாபழங்காடி தன்னைவாங்கே. (௯௰)

வாங்கிநன்றாய்முன்போலே கரைத்திறுத்து
மைந்தனேநீர்வற்றக் காயப்போடு
ஏங்கியேதிரியாதே சம்பழத்தின்சாற்றி
லிறுக்கவேபிசைந்துருட்டி ரவியிற்போடு
ஆங்கதுகொண்டேயெடுத்துப் பொடியதாக்கு
அப்பனேபீங்கானி லிட்டுக்கொண்டு
தீங்கில்லாப்பழச்சாறு பிழிந்துக்கொண்டு
செவ்வையாய்விதானித்து வுப்புச்சேரே. (௯௧)

சேரப்பாவுப்புமிஞ்சிக் கறிப்பில்லாமற்
செவ்வையுடன்தானரைத்து யிறுத்துக்கொண்டு
வாசப்பாகடுக்காய் சூரணத்தில்மைந்தா
வரிசையுடன்சாறுவிட்டுப் பிசறிக்கொண்டு
நேரப்பாபதப்படுத்தி நிழலில்வைத்து
நேர்மையுடன்பரணிதனி லடக்கம்பண்ணி
காரப்பாபொருத்தநாள் பார்த்துநீயும்
கருவானசூரணத்தில் பணிவிடைதான்கொள்ளே. (௯௨)

கொள்ளவேமண்டலத்திற் சீதம்போகுங்
தொண்டதொருமலங்கள் நிதங்கதுபோகுமந்த

மெள்ளவேவாதநீர் பித்தநீரும்
மேலானசிலேத்துமத்தின் சீதங்கட்டும்
சுள்ளவேவாங்கிவிடுங் கடுக்காய்கர்ப்பஞ்
சுகமாகக்கொண்டுவர நரைதிரைகள்மாறும்
விள்ளவேவேண்டாங்காண் தேகவச்சிரம்
மேலானவயதுசிறு வயதாம்பாரே. (௬௩)

பாரப்பாயிந்தமுறை யார்க்கென்றாலும்
பகராதேராமரிட வாக்கியந்தன்னை
காரப்பாமனதுறுதி யாலேமைந்தா
கருவானநூலிருக்கு தென்றுசொல்லி
வீரப்பாகொண்டுமதி கெட்டுநீயும்
வீணருடன்வாய்சமர்த்தால் விளம்பினாக்கால்
நீரப்பாதான்பெருகி சிரசிலேறி
நின்றநிலைதப்பியுட லழிந்துபோமே. (௬௪)

உடலழிந்துபோனதினா லுனக்கேதுண்டு
உண்மையுடன்மவுனமதா யிருங்காயாகில்
சடலமென்றவாக்கையது நிலைக்குமப்பா
சண்டாளப்பயல்களுற வாகாதையா
படலறிந்துதிறக்கறியா நாய்கள்போலப்
பாவிகள்தான்பொய்பேசிப் பாதவிப்பார்
குடலடுத்துகுணமறிந்து கர்ப்பங்கொண்டு
குருவானபதிநோக்கிக் குணமாய்நில்லே. (௬௫)

குணமானகாயாதி கர்ப்பந்தன்னைக்
கூறறிந்துகொண்டுவரும் போதிலேதான்
மணமானயெண்ணெயொடு புளியுமாகா
மாண்டிறந்தமீனுகா யிறச்சியாகா
கனமாகநான்சொன்ன விந்தநாலுங்
காசினியோர்தானறிந்து தள்ளாயிற்
பிணமாகிப்போய்விழுவா னையாவையா
பிலத்ததொருபுத்தியினாற் கண்டுதள்ளே. (௬௬)

தயிலம்.

தள்ளப்பாமற்றதெல்லாங் கொண்டுதேற
தலமானசடத்திற்கு வுறுதியாகும்
கொள்ளப்பாதயிலமொன்று சொல்லக்கேளு
கூர்மையுள்ளவண்டமடா பலம்பத்தாகும
விள்ளக்கேள்சருகுபல மன்பதாகும்
விளம்பினது ரெண்டுமடாவாதியந்தம்

அள்ளக்கேள்ரெண்டையுமே பொடியாய்ச்செய்து
அப்பனேபரண்டத்திலடைத்திடாயே (௬௭)

அடைத்ததின்மேலமுரிவிட்டுக் களிபோற்கிண்டி
யரகாரரவிதனிலே யுலர்த்திக்கொண்டு
இடித்துடனேகுழித்தயில மிறக்கியேதான்
செவ்வையுடன்பரணிதனி லடக்கம்பண்ணி
படைத்ததொருவண்டமதை மூன்போநசுத்திப்
பக்குவமாய்ச்செய்துகொண்டு மைந்தாகேளு
செடத்துடையசத்தியிடநாதமொன்று
செங்கமலமாவினிட நாதம்ரெண்டே. (௬௮)

ரெண்டுடனேஒன்றதனைச் சேர்த்துக்கொண்டு
நோராகஅமுரிவிட்டுக்கலவக்காட்டி
விண்டுப்போல்வட்டகனைப் பிடித்துநன்றாய்
வெய்யில்தனிற்காயவைத்துச் சிலேசெய்து
அண்டர்பிரான்றனைத்தொழுதுப் புடத்தைப்போடு
அப்பனேபுடமாறி யெடுத்துப்பாரு
மண்டலங்கள்மெய்க்கவேதான் வெளுத்துநீறி
மாசற்றபற்பமதா யிருக்குந்தானே. (௬௯)

தானென்றபற்பமதை யெடுத்துக்கொண்டு
தண்மையுள்ளபரணிதனி லடக்கம்பண்ணி
தேனென்றதயிலமதிற பணவிடைதான்பற்பஞ்
செவ்வையுடன்றூன்குழைத்துக்கொண்டாயாகில்
ஊனென்றதேகமது வலுத்துநல்ல
வுறுதியுள்ளவாசியது வசையாதப்பா
கோனென்றகுருவருளா லிந்தகற்பங்
கொண்டுசிவயோகமதிற் குறித்துநில்லே. (௭௰)

நில்லென்றசிவயோக மார்க்கந்தன்னில்
நீமகனேமனதுறுதி யாகநின்றால்
சொல்லென்றசொற்களெல்லா மந்திரங்காணுருந்
துருவமுள்ளதேகமது திறமமாகும்
வில்லென்றவிசைபோலே வாசிதானும்
வேதாந்தச்சுடரொளிபோல் மேவிநிற்கும்
மல்லென்றமல்பிடித்தாப் போலேவையா
வாசியதுதேகமதில் வலுக்குந்தானே. (௭௧)

தானப்பாசிவயோகஞ்செய்யும்போது
தண்மையுள்ளதூபமொன்று சொல்லக்கேளு

பூணப்பாவண்டமது பலந்தான்றண்டு
புகழ்பெரியகஸ்தூரி மஞ்சள்தானும்
தேனப்பாமணஞ்சிட்டிக் கறுவாய்ப்பட்டைத்
தேக்குடனேயகிற்கட்டைத் தேவதாரம்
நாணப்பாகிழங்குடனே கிளியூறல்பட்டை -
நலமானசாதிக்காய் ரசனைகூட்டே. (௧௨)

கூட்டப்பாசரக்குவகை பதினொன்றுக்கான்
குணமாகக்கல்வத்திற் றாளாய்ப்பண்ணி
மாட்டப்பாபசுவினெய் தன்னாலாட்டி
மைந்தனேகட்டிவிடு மெழுகுபோலே
நாட்டப்பாசிறுபில்லை யாகத்தட்டி
நலமானகாகத்தில் வைத்துக்கொண்டு
தேட்டப்பாசிவயோகஞ் செய்யும்போது
திறமாகத்தணலிலொரு பில்லைவைபே. (௧௩)

வையப்பாதணலிலோர் பில்லைதன்னை
வைக்கயிலேபுகைமண்டி மேலேசாடும்
மெய்யப்பாசொல்லுகிறோம் புகைவாசமேதில்
மேன்மையுள்ளலகிரியடா யென்னசொல்வேன்
செய்யப்பாபில்லைதனை நெய்யிற்றோய்த்து
திறமானநெருப்பினிலே வைததுக்காரு
வையப்பாவப்புகையி னாலேமைந்தா
பரமகயிலாசவொளி பார்க்கலாமே. (௧௪)

ஆமப்பாபுகைதானு மெய்யிற்சாடி
யப்பனேசன்னிமுதல் வாதந்தீரும்
தாமப்பாபில்லிமுதல் சூனியங்கள்தீரும்
தருகாதகுட்டமெல்லாந் தவறுண்டோபோம்
யோமப்பாசலதோஷம்பொருமல்காந்தல்
பொல்லாதநெஞ்சடைப்புப் போகும்போகும்
நாமப்பாசொன்னபுகை யார்க்குஞ்சொன்னால்
நல்யோகமார்க்கமது நாடுந்தானே. (௧௫)

நாடிப்பார்நிருவிகற்ப சமாதியாக
நன்மையுடனலவழியே நடந்துக்கொண்டு
தேடிப்பார்சற்குருவை நன்றாய்த்தேடு
தேடியவர்சனமதிற் றிறமாய்நின்று
கூடிப்பார்சுழிமுனையை நன்றாய்க்கூட்டிக்
குருவானபதிநோக்கி யமுர்தங்கொண்டால்

வாடிப்போந்தேகமது வாடாதையா
　　வரிசையுள்ளவுரிசையைநீமறந்திடாதே (௱௬)

மறந்திடாவுரிசையென்ன வென்றுகேட்டால்
　　மார்க்கமுடன்சொல்லுகிறேன்மகனேகேளு
கறந்ததொருகல்லுப்பு நீருப்புந்தான்
　　கண்டுகொண்டுகெடிகைநிதங் கொண்டாயாகில்
இறந்திடாதேயிருக்குங் காயங்காய
　　மென்னசொல்வேன் மாயமென்றுலோகத்தில்
மறந்திடாதக்கினியை யக்கினியிற்சேர்க்க
　　மாண்டவர்களில்லைபடா வழலைச்சித்தே. (௱௭)

சித்தானவழலையிட மார்க்கந்தன்னைச்
　　செவ்வையாய்ச்சொன்னனடா வாயிரத்தில்
முத்தானமுப்பதிலுஞ் சொன்னேனந்த
　　மூர்க்கமுள்ளவயித்தியத்தில் முறையாய்ச்சொன்னோம்
பத்தாசைகொண்டபல திரட்டிற்றனும்
　　பக்குவங்கள்நன்றாகப் பதிவாய்ச்சொன்னோம்
வத்தாகபூரணத்தை மனதாய்க்கொண்டு
　　மார்க்கமுடன்சிவயோக மிருந்திட்டேனே. (௱௮)

கல்லுப்புச்சுண்ணம்.

இருந்திட்டபோதில்மனோன் மணிதான்வந்து
　　யேகாந்தவழலைமுறை நன்றாய்ச்சொன்னாள்
திருந்திட்டவழலையென்று லார்தான்காண்பார்
　　சிவாயகுருவருளதினாற்செப்பக்கேளு
பொருந்திட்டபூவழலை யண்டக்கூறு
　　பூரணமாய்நின்றதுவுங் கல்லுப்பாச்சு
கருந்திட்டமானதொரு கல்லைவாங்கிக்
　　கருவானசுத்தசலந் தன்னிற்போடே. (௱௯)

போட்டடுப்பில்வைத்துநீயெரிக்கும்போது
　　புண்ணியனேநீர்வற்றி யுப்புத்தானும்
தாட்டிகமாயூறலற்றுக் கட்டிப்போச்சு
　　தயவானகல்லுப்பை வாங்கிமைந்தா
நாட்டியதோர்வெடியுப்புச்சீனப்பெண்டு
　　நயமானகல்லுமே மூன்றுமொன்றாய்க்
கூட்டியேகல்வத்திற்பொடித்துக்கொண்டு
　　குருவானபழச்சாறு வதனிற்றாக்கே. (௱௰)

தாக்கிநன்றாயரைத்துருட்டிவட்டேப்பண்ணிச்
　　சமத்தாகாவிதனிலே காயப்போடு

தூக்கிநன்றாய்ச்சுண்டிடவே கணிரிட்டாக்கால்
சுகமாகமண்சீலை வலுவாய்ச்செய்து
வாகுமனதுறுதியினற் புடக்கைப்போடு
மைந்தனேபுடமாறியெடுத்துப்பாரு
நாக்குறுனிவெந்துவிடுஞ்சுன்னவேகம
நாதாந்தக்கல்லுப்புச்சுன்னந்தானே (௱மக)

சுன்னத்தொந்தம்.

சுன்னமதைத்தானெடுத்து வைத்துக்கொண்டு
சுருக்கானரசமுடனே வங்கஞ்சேர்த்து
நன்னயமாயிதற்குநிகர் சுன்னங்கூட்டி
நாட்டியரைகலவத்திற பழச்சார்விட்டு
தன்மையுடன்மெழுகுபோலாட்டிப்பில்லை
தான்பிடித்தரவிதனிலே காயப்போட்டு
உண்மையுடனோட்டில்வைத்து மண்சீலைசெய்து
வுத்தமனேபுடம்போடச்சுன்னமாச்சே. (௱மஉ)

ஆச்சப்பாசுன்னமதிற் சுன்னஞ்சேர்த்து
அப்பனேவாயநீரா லரைத்துக்கொண்டு
பாச்சப்பாதுருசுதனைக் கங்கிபூட்டிப்
பக்குவமாய்க்காயவைத்து வோடுமூடி
பூச்சப்பாமண்பூசிப் புடத்திற்போடு
பொருமிவெந்து துருசதுவுஞ்சுன்னமாகும்
நீச்சப்பாவெகுநீச்சு துருசுசுன்னம்
நிலைத்துதென்றால்வெகுகோடிவேதையாமே. (௱மங)

ஆமப்பா துருசுநீரெடுத்துக்கொண்டு
அப்பனேநாலிலொன்று வீரஞ்சேர்த்து
நாமப்பாசொல்லுகிறோம் வாய்நீர்தன்னால்
நன்றாகத்தானரைத்து வழித்துக்கொண்டு
தாமப்பாதாரத்திற் கவசஞ்செய்து
சமத்தாகரவிதனிலே காயப்போடு
ஓமப்பாமண்சீலை வலுவாய்ச்செய்து
வுத்தமனேபுடம்போட நீறதாச்சே. (௱மச)

லோகவாதிகுணம்.

நீறானதாளகநீ றதிகமப்பா
நீள்திசையில்வாதிகளோ ரறியப்போறார்
பாறானநீறாலே யனந்தம்வேதை
பக்குவமாய்த்தானறிந்தோ னவனேவாதி
கூறாதேசிவயோகமிருக்குதென்று
குணமறியாநெஞ்சரிடங்கூறவேண்டாம்,

பேராசைதான்பிடித்துப் பொய்மைப்பேசித்
　பிதற்றிநூல்தனைச்சேழ்ப்பான் பேயன்தானே (௧௧௫)

தானென்றபேயர்கள்தான் மெத்தவுண்டு
　கானறிந்து அவர்களுடன் சேரவேண்டாம்
ஊனென்றவுறுதிதன்னை யறியான்மட்டை
　யொருசொல்லின்பயனறியா னுறுதிகாணான்
தேனென்றவமுர்தமதை யறிந்துகொள்ளான்
　சிற்றின்பக்கூற்றறியான் தெருவிலேதான்
வீணென்றமாடுபோற் றிரிவான்சண்டி
　மேல்வரப்புகீழ்வரப்பு அரியான்றானே. (௧௧௬)

அறியாதலோபரைத்தா னடுக்கவேண்டா
　மவர்களிடம்நூல்முறைகள் பேசவேண்டாம்
விரிவானவிலாசமதா யிருக்கும்போது
　வீண்பயல்கள்வந்துவுற வாடிக்கொண்டு
நெரியானபொருளேது பயன்களேது
　நிஷ்டைமுறைதனக்குறுதி யானதேது
பரியானமரியமைத்த வாறங்கேது
　பற்பவகைக்குறுதியென்ன பகரொன்பாரே. (௧௧௭)

பகரொன்றுசேழ்க்கின்ற பசாசரைத்தான்
　பக்குவமாய்த்தானகற்றி யறிவில்நில்லு
சிகாமென்றதீயவொளி தன்னைப்பாரு
　சிவயோகநிஷ்டையிலே சென்றேநில்லு
அகாமென்றதேகமதி லாறுதார
　மடுத்துநின்றசக்தியடா மூலாதாரம்
நிகரில்லாமவுனமடா பிர்மபீடம்
　நேர்மையுடன்பீடமதில் நேர்ந்துநில்லே (௧௧௮)

நேர்ந்துகொண்டதாளகத்தி னீற்றைவாங்கி
　நேர்மையுடன் தாருசுநீ ரொன்றாய்ச்சேர்த்துக்
கூர்ந்துநின்றவெடியுப்புச் சுண்ணந்தன்னைக்
　கூட்டடாநாவிலொன்று வாய்நீர்தன்னால்
ஆர்ந்துநன்றாய்க்கலவமதிற் குழப்பிக்கொண்டு
　அப்பனேயுனைப்பொடியை ரெட்டிப்பிட்டுச்
சேர்ந்துநன்றாயொன்றாகக் குழப்பிககொண்டு
　செவ்வையாய்க்குகைதனிலே யிட்டுமூடே. (௧௧௯)

மூடிநன்றாய்மண்சீலை வலுவாய்ச்செய்து
　மூர்க்கமுடன்குகைதனிலே யழுகவூது
வாடிநன்றாய்மாண்மறந்து வுருகிநிற்கு
　மைந்தனே ஆயத்தோடே நாகஞ்சேரு

தேடிநன்றாய்ப்பரியதுவுங் கூடச்சேரு
செவ்வையுடன்சேர்க்கவொன்றாய்த்திரண்டுபோகும்
கூடிநன்றாய்த்திரண்டுநின்ற வயக்களங்கைக்
கூர்மையுடன்தானெடுத்து வைத்துக்கொள்ளே (௧௨௰)

கொள்ளப்பாவயக்களங்கை வைத்துக்கொண்டு
குருவானசற்குருவைத் தியானம்பண்ணி
நில்லப்பாமதிதனிலே பார்த்துக்கொண்டு
நீமகனேகொடுத்துருக்க மாற்றெட்டாகும்
செல்லப்பாபுடம்போடத் தங்கமாகும்
சிவயோகந்தனக்குறுதி யானதங்கங்
கல்லப்பாகசிந்துருகி நின்றதங்கங்
கருவானவண்டமெற்ற தங்கந்தானே. (௧௨௧)

தானென்றதங்கமடா பிர்மபீடம்
தனையறிந்துசிவயோகத் தன்மைபாரு
ஊனென்றவுடலுயிர்க்கு முதவியான
உற்றசிவயோகமதை யார்தான்பார்த்தார்
வேனென்றசெகந்தனிலே கோடிக்கொன்று
வேதாந்தஞ்சித்தாந்த மறிந்துநல்ல
தேனென்றவமுர்தமதைக் கண்டுகொண்டு
சிவயோகச்சிந்தையிலே யிருந்திட்டாரே. (௧௨௨)

இருந்திட்டபெரியோர்கள் மார்க்கந்தன்னை
யென்னசொல்வேன்வேனவர்களுட மனதுதன்னை
கறந்திட்டபால்போலே சுத்தமான
கருவானபிள்ளைகளைத் தேடிப்பார்த்து
வருந்திட்டமாகவே வசனஞ்சொல்லி
வாக்குமனமொன்றாக நிலையுஞ்சொல்லி
சிறந்திட்டசிவயோக மவனுக்கீய்ந்து
செவ்வையுடன்குருவடியைத் தினமும்போற்றே. (௧௨௩)

போற்றென்றுபுத்திமதி நன்றாய்ச்சொல்லிப்
போக்குவரத்தாகின்ற நிலையுஞ்சொல்லி
தீற்றென்றநீற்றினத்தின் வகையுஞ்சொல்லி
நிலையானவாதியந்தப் பொருளுஞ்சொல்லி
காற்றென்றமுப்பூவின் மருமஞ்சொல்லி
காபாதிகற்பததின் பேருஞ்சொல்லி
கூற்றென்றதிருநடனக் குறியுஞ்சொல்லிக்
குணமானயிடமறிந்து மிதுவேபாரே, (௧௨௪

பாரானபெரியோர்கள் மார்க்கஞ்சொன்னேன்
பண்பறியாமூடரிட வழியுஞ்சொன்னேன்

கூறுசகாயாதி கர்ப்பஞ்சொன்னேன்
குருவானபதிநிலையின் குணமுஞ்சொன்னேன்
மாறுகவாசியிட வழியுஞ்சொன்னேன்
வாசிநின்றுதாணிலங்கு மவுனஞ்சொன்னேன்
ஆறுதமவுனத்தின் மேலேநின்று
அசைவில்லாதீபவொளி யருள்சொன்னேனே. (௱௨௫)

சொன்னதொருசிவயோக மிருநூறப்பா
சுருக்கமுள்ள நூலெனவே மனதிலெண்ணி
நன்னயமாயுதயாதி காலந்தன்னில்
நன்றாகத்தேகசுத்தி நலமாய்ச்செய்து
அன்னையெனுஞ்சற்குருவைத் தியானம்பண்ணி
யன்பாகவிபூதிமெய்யி லணிந்துக்கொண்டு
வின்னமில்லாப்பிர்ம நிஷ்டைதனிலிருந்து
விரும்புநன்றாய்ரேசபூரகமும்பண்ணே. (௱௨௬)

புருவமைய நிதானம்.

பண்ணப்பா கும்பகத்திற் பகிவாய்நின்று
பாக்கியமாஞ்சிவயோகங் கையில்வாங்கி
உண்ணப்பாமவுனமகா யிருநூறும்பாரு
வுத்தமனேயதைத்தொடுத்த நாதம்பாரு
சண்ணப்பர்துலங்குவது போலேயிங்கக்
கருவானசிவயோகக் கருக்கள்தோன்றும்
நண்ணப்பாவக்கருவைக்குறித்துக்கொண்டால்
நல்லசிவயோகமதில் நண்ணலாமே (௱௨௭)

ஆமப்பாசிவயோகமறியவேண்டும்
மந்தரங்கமானகருக் காணவேண்டும்
காமப்பாலகானப்பால் கொள்ளவேண்டுங்
கைமுறையாய்ப்பூசைவிதி பண்ணவேண்டும்
வாமப்பால்கொண்டுமதி யறியவேண்டும்
வரிசையுள்ளவரிசைதனைக் காணவேண்டும்
தாமப்பாதன்னிலையைத் தானேகண்டு
சங்கையுள்ளகெங்கையிலே ஸ்நானம்பண்ணே (௱௨௮)

கெங்கையென்றுலகமேயென்று கேட்பாயாகிற்
கேசரத்திற்கேசரியாம் புருவமையம்
அங்கையடாசுழிமுனையி லஷ்டகெங்கை
யறுதினமுமவ்விடத்தோட்டமாக
சங்கையுடனின்றதினால் ஸ்நானமாகுந்
தன்மையுடன்பூசிக்கத் தரிசனமுமாகும்

மக்களமாய்மனதொருமை யாகநின்றால்
    மத்தானசிவயோக வரிசைதானே (௧௨௯)

வரிசையுள்ளபுருஷமையா மெங்கேயென்று
    வாய்திறந்துசொல்லுதற்கு நாவோயில்லை
புருஷருடன்மன தரிமை யாகவென்று
    பொற்குருவாஞ்சற்குருவைப் போற்றிநின்றால்
குருஷமுகமவனறிந்து சொல்வான்கேளு
    குண்டலியாமுக்குநடு வோரந்தன்னில்
பருவபதாயங்கிவளர்ந்தெழுந்சுவாசிப்
    பற்றுதடாபுத்தியென்ற குகைவிற்றானே (௧௩௰)

தானென்றகுகையிலங்க ஆவிசென்று
    தன்மையுடன்புத்தியிலே பற்றிநல்ல
கோனென்றபுத்திநல்ல தீபம்போலே
    கொழுந்துவிட்டுயெரியுமடா குணமாய்ப்பாரு
மானென்றவத்தீப வெளியிலேதான்
    மயங்காமற்றியங்காமல் வரிசையாகத்
தேனென்றருசிபோலே சிவயோகத்தைச்
    சிந்தைவைத்துக்கண்டவனே சிவயோகியாமே- (௧௩௧)

திலர்தம்

ஆம்பபாசிவயோகத் திருக்கும்போது
    அருளானதிலர்தவகை யொன்றுகேளு
ஆம்பபாசொல்லுகிறேன் மண்டத்தோடே
    நலமானமாமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்
தாமப்பாசாதிக்காய்ச் சாதிபத்திரி
    தாழம்பூத்தாளுடனே சந்தனமும்பூவுங்
காமப்பாலதல்மகமுங் கஸ்தூரிகோவங்
    களங்கமற்றபுழுகுடனே கர்ப்பூரங்கூட்டே. (௧௩௨)

கூட்டப்பாசரக்குவகை பதினொன்றுந்தான்
    குறிப்பாகவோரிடையா யெடுத்துக்கொண்டு
நாட்டப்பாகலவமதிற் பொடித்துக்கொண்டு
    நலமானபழச்சாறும் பன்னீர்வார்த்து
ஆட்டப்பாவடிமிளகு போலேமைந்தா
    வரைக்கவிலேபுழுகிட்டு அரைத்துநன்றாய்
நீட்டப்பாகயிரகம்போல் நீட்டிக்கொண்டு
    நிழலுலர்த்திப்பதனமதாய வைத்துக்கொள்ளே. (௧௩…

கொள்ளுருதவிதமென்ன வென்பாயாகிற்
    குணமாகச்சிவயோகத் திருக்கும்போது

நல்லுருவாய்த்திலர்தமதை யெடுத்துக்கொண்டு
நாட்டப்பாகுருபதிமேற் றிலர்தம்போடச்
சொல்லுகிறமந்திரந்தானென்றுகேளு
சுருக்கடாசுவாவென்று திலாதம்போட்டு
உள்ளுறவாயிருத்வத்தின் மனதைநாட்டி
உமமெனவேகம்பித்து வொடுங்கிநில்லே. (௧௱௪)

ஒடுங்கியந்தவொடுக்கமதி லொடுங்கிநில்லு
வுலகத்திலுள்ளவர்க ளுன்னைக்கண்டாற்
படிந்துவுந்தன்பாதத்திற் பணிவாரையா
பக்குவமாய்ப்பிணியாளர் பணிந்துகண்டால்
நடுங்கிமிகப்பணிந்தோடும்பிணிகளெல்லாம்
நலமானசிவயோகச் செந்தீப்பட்டு
மடிந்துவிடும்பிணிகளெல்லா முலகிலுள்ளோர்
மண்டிநிற்பாருன்சமுகங் கண்டிலாரோ. (௧௱௫)

திலர்தமை.

கண்டபடி பின்னமொரு சருவைக்கேளு
கருவானதிலர்தமை யொன்றுசொல்வோம்
விண்டபடியாரறிந்து செய்யப்போறார்
மேலானவேகாந்தி செய்வானப்பா
அண்டமெனுங்கருவெடுத்து வைத்துக்கொண்டு
அப்பனேயேரண்டத் தயிலத்தாலே
சுண்டிடவேகுழைத்துநல்ல ரவியிற்போடு
தூசிசெத்தைவிழுவாமற்சுகமாய்க்காரோ (௧௱௬)

கார்த்துநன்றாய்ரவிதனிலே யிண்டிக்கிண்டி
கனமாகநீர்வற்றகாயப்போட்டால்
பார்த்துநின்றரவியினிட வொளிதான்சென்று
பங்கயத்தின்மைதனிலே பற்றும்பாரு
சேர்த்துநின்றமையொளியின் பெருமைதன்னைச்
செப்புகிறேன்மனோன்மணியின் றிறத்தநல்மைந்தா
சாற்றுகின்றமையெடுத்துச் சிமிளில்வைத்து
சாதகமாய்மைக்குநிகர்புழுகுஞ்சேரே- (௧௱௭)

சேரப்பாபுழுகிட்டு மைவிளக்கிச்
செவ்வையாய்ச்சிவயோகத் திருக்கும்போது
நேரப்பாநின்றநிலை தவறாமற்றான்
நேர்மையுடன்மையெடுத்துத் திலர்தம்போட்டு
ப்பாவஞ்சனு தேவிபாதம்
ருத்துடனேமனதறிவாற் காத்தாயாகில்

ஊரப்பாவுள்ளபயி ருயிர்களெல்லா
முனதுவசமாகிவுனக் கடிமையாமே. (௧௩௮)

ஆமப்பாவிடக்ராத்தில் மைப்பொட்டிட்டு
அசையாமற்கூர்ந்துமையை யன்பாய்ப்பார்த்தால்
சோமப்பாவெகுதூரம் ஒளிதான்தோன்றும்
புதுமைவெகுஅதிசயங்கள் கண்ணிற்காணுங்
தாமப்பாகண்டதொரு வதிசெயத்தைத்
தாரணியில்விள்ளாதே தனதாயார்க்கும்
நாமப்பாகண்டபடி யின்னதென்று
நாட்டினால்நாய்போலே யலைவர்பாரே. (௧௩௯)

பாரப்பாவலக்கரத்தில் மைப்பொட்டிட்டு
பதிவாகக்கீழ்த்திசையைப் பரிவாய்ப்பாரு
நேரப்பாவதுதாழ்ந்து தலைதான்றோன்று
நீதிகள்பலவதிசெயங்கள்நிசமாய்க்காணுந்
தேரப்பாமனந்தேறி யகலவில்லு
சிவசிவாசிவயோகத் திறந்தானென்று
ஊரப்பாவறியாமல் மையைநீயும்
வுண்மையுடன் பதனமதாய்வைத்துக்காரே. (௧௪௰)

காரடாமூலமதில் அங்கென்றோதிக்
கைம்முறையாய்ச் சத்திசிவமொன்றாய்ச்சேர்த்து
சேரடாகம்பியுப்புப் பூரம்ரெண்டு
செவ்வையுடன்தூக்குநிகர் சேர்த்துக்கொண்டு
வாரடாகல்வமதில் நன்றாயாட்டி
வழித்துஒருபீங்கானில் வளமாய்ச்சேர்த்து
நேரடாரவிதனிலே காயப்போடு
நிசமானநந்தியென்ற வுப்பதாச்சே. (௧௪௧)

நந்தியுப்புக் குரு

உப்பானநந்தியுப்புப் பலந்தானென்று
ஒருமையுள்ளவரைப்பொடியும் பலந்தானென்று
அப்பானபொடியதுவும் பலந்தானென்று
அருமையுள்ளதாளகமும் பலந்தானென்று
வைப்பானகாசியிட கட்டிதானும்
மார்க்கமுடன்பலமறைதான் வளமாய்ச்சேர்த்துத்
தப்பாமல்நாகரசமொன்றாய்க்கூட்டித்
தண்மைபெறவொருபலந்தா னெடுத்துக்கொள்ளே (௧௪௨)

கொள்ளப்பாவாறுவகைச் சரக்கைநன்றாய்க்
குருபானைத்தொழுதுமிகக் கல்வத்திட்டு

மெள்ளப்பாதான்பொடித்துப் பழச்சார்விட்டு
 மேன்மைபெறமெழுகதுபோ லாட்டிமைந்தா
கள்ளப்பாவுருட்டியதை வட்டுபண்ணி
 நலமாகவோடதனிலநடுவேவைத்து
செள்ளப்பாசெப்பகலால் நன்றாய்மூடிச்
 திர்க்கமுடன்கொழிமணலே யதின்மேற்கொட்டே, (௧௬௩)

கொட்டுவதுகுருசொன்ன வளவாய்க்கொட்டி
 கூர்மையுடனடுப்பேற்றித் தீயைமூட்டிக்
திட்டமுடன்தீயெரித்து வருகும்போது
 சிவசிவாபதமென்ன வெவ்பாயாகில்
வட்டமுள்ளமணல்மேலே கருகிற்றானல்
 மைந்தனேபதஞ்சரியென் றெடுத்துமெள்ள
சட்டமுடனூறவைப்பாய்க் குளிருமட்டுந்
 தண்மையுடன்குளிர்ந்ததின்மேல் தயவாய்க்கேளே (௧௬௪)

கேளப்பாமணலேமெள்ள வாரிப்பின்பு
 இருபையுள்ளதிண்ணமதைத் திறந்துப்பாரு
வேளப்பாயெரித்தநெற்றிக் கண்ணுலந்த
 விதமானசரக்காறுங் கட்டிப்போகும்
கேளப்பாசொல்லாமல் வைத்துக்கொண்டு
 குருவானதிருவடியைத் தொழுதுபோற்றி
வாளப்பாகுகைதனிலே செம்புருக்கி
 வரிசையுடனதுக்குவகா மருந்துசேரே. (௧௬௫)

செம்புசுத்தி

சேர்ப்பதுதான்செம்புருகி நிற்கும்போது
 செவ்வையுடன்மருந்தெடுத்துச் சிருகவையா
கோர்ப்பதுபோற்கொஞ்சகொஞ்ச மாகச்சேர்த்துக்
 குணமாகச்சரியாகச் சேர்த்துக்கிண்டி
வார்ப்பதுதான்பூமியிலே வார்த்தாயாகிற்
 மகத்தானசெம்பதுவுஞ் சுத்தியாச்சு
கார்ப்பதுதான்செம்புசுத்திப் பதனம்பண்ணிக்
 கருவானவெள்ளியிலே பத்துக்கொன்றே. (௧௬௬)

ஒன்றானவெள்ளியிலே பத்துக்கொன்று
 வுருக்குமுகந்தன்னில்நீ கொடுத்துப்பாரு
கன்றானமாற்றதுவு மூவைந்தாகி
 நாற்றமுள்ளசெம்புதனி லேழரையுமாகும்
குன்றாததங்கமதிற் பத்துக்கொன்று
 கொடுத்துருக்கித்தகடித்துப் புடத்தைப்போடு

நின்றுடும்பரஞ்சோதி யானசோதி
நேர்மையுள்ளசோதியடா தங்கந்தானே. (௧௪௭)

லிங்ககுரு

தானென்றதளவாயாஞ் சாதிலிங்கந்
தண்மையுடனதுவிபரஞ் சாற்றக்கேளு
தேனென்றகலவத்திற் பழச்சாறிட்டுத்
திறமாகவரைத்துநன்றாய் வட்டுப்பண்ணி
கோனென்றகுருபதத்தைப் போற்றிநன்றாய்
குவலயத்தில்துஷ்டர்களை யகலத்தள்ளி
மானென்றமண்மறைவிற் புடத்தைப்போடு
மார்க்கமுடன்சரக்கைந்துங் கட்டிப்போமே. (௧௪௮)

கட்டிநின்றமருந்திடைக்குச் செம்புருக்கிக்
கைமுறையாய்மருந்ததனைச் செய்துக்கொண்டு
இட்டமுடன்தண்ணீர்போ லுருக்கிச்சாய்த்துச்
செவ்வையுடன்செம்பதனை யெடுத்துப்பாரு
சட்டமதாய்ச்செம்பதுவுங்கட்டிப்போகுந்
தண்மையுடன்வெள்ளிதனிற் பத்துக்கொன்று
இட்டமுடன்கொடுத்துருக்கி மாற்றைப்பாரு
என்னசொல்வேன் பதினாறுவயதுதானே. (௧௪௯)

தானானவேதைமுறை சொன்னமார்க்கந்
தன்மையுள்ளயோகத்துக் குறுதியாகுங்
கோனானகுருவருளால் சொன்னதல்லாற்
குறும்பானதிருடனுக்கோ சொன்னேனையா
மானானமவுனமுள்ள சிவயோகிக்கு
மனதுரிமையாகவென்று வாழ்த்தினேன்யான்
தேனானமதியமுர்தங்கொண்டுநல்ல
சிவயோகமார்க்கத்திற்சேர்ந்துநில்லே. (௧௫௦)

நிஷ்டைமுறை.

நில்லென்றநிலைப்பிறிந்துநிஷ்டைகூடி
நிஷ்களமாம்பிர்மமத்தில் வாசிபூட்டிச்
சொல்லொன்றுந்தவறாமல் மதியைப்பார்த்துத்
துலங்குமதிரவிதனிலே மதியைப்பார்த்துக்
கொல்லென்றுரவிதனிலே வுரிமையாகக்
கூறுபஞ்சவக்கினியைக் கொளுத்திப்பாரு
சில்லெனறுமதியமுர்தம் வாரியாயுஞ்
சிவசிவாவந்தமுர்தங் கொண்டுதேறே (௧௫௧)
தேறுவதால்தேகவச்சிரகாயமாகுஞ்
சிந்தாதிசித்தனென்றபேருமாகுந்

கார்புருவக்கருணைவிழிக் கமலமீதிற்
கருவானபருதிமதிச் சுடருக்கப்பால்
பார்புனலாம்நெருப்பாறுக் கப்பால்நாதம்
மதிவானநாதமதைப் பார்க்கவேண்டிக்
கூரமுதமதிபெருகு நாதத்தோடே
கொண்டுசடம்நின்றநிலை கூர்ந்துபாரே. (௧௫௨)

சந்திரசூரியன்

கூர்ந்துபார்சூரியனே சத்திசத்தி
கொழுகிநின்றசந்திரனே சிவமதாகும்
தேர்ந்துபாரிவர்களிட விதானங்கேளு
சிவப்பானசூரியகலை பனிரெண்டாகும்
ஆர்ந்துபார்சந்திரகலை பதினாறாகும்
அதிசமுள்ளசந்திரனும வாண்மைமிஞ்சிச்
சேர்ந்துசுடர்சத்திகலைபனிரெண்டோடே
சிவசிவாசிவகலையுஞ் சேர்ந்தவாறே. (௧௫௩)

சேர்ந்துமிச்சம்நாலுகலை பூரணமாய்நின்று
செவ்வையுடனாலிலொன்று அம்பரத்தின்பதியாய்
நேர்ந்துமிகப்போனதின்பின் மூன்றுகலைதானும்
நெடுவானில்விந்துவென விளம்பிறையுமாகக
கூர்ந்துபார்சததியிடங் திருவாசியாகிக்
கொழுகிநின்றசதுர்தேசி யாகிப்பின்னும்
ஆர்ந்துநின்றவமாவாசைப்,பருவமாகி
யுந்தமொன்றுமிதுமூன்றுமொன்றாய்ப்போச்சே (௧௫௪)

ஒன்றாகச்சதுர்த்தியிலே வளர்பிறையாய்நின்று
யுகமுடிந்த்வளர்ந்துதடா பதினாறாகக்
கண்டாயோமதிநிறைந்து குறைந்தசெய்தி
கருவாகவுனதிடைத்தில காட்டிவைப்போம்
பண்டானவகாரமடா விந்துவிந்து
பதிவானவுகாரமடா சகதிசத்தி
நின்றும்மகாரமடா சுழிமுனைக்கம்பம்
நேர்மையுடனிதுமூன்றுந் தேகமாச்சே. (௧௫௫)

தேகமென்றால்வெகுதூரம் நினைக்கவேண்டாம்
சேர்ந்துநின்றவாதபித்தஞ் சிலேற்பமாகும்
ஆகமுடனதுமூன்று மிடைபின்னாக
வமர்ந்துநின்றசுழிமுனையாய்நின்றவாறும்
பாகமென்றசூரியன்றான் வாதமாச்சு
பதிவானசந்திரன்றான் பித்தமாச்சு

சாகமூடன்சேத்துமந்தான் சுழியாய்நின்று
சகலசெந்துமூன்றினால் மடிந்தவாறே. (௧௫௬)

மடிந்தவகைகயேதெனவே பெண்பாயாகில்
மக்களேயவனவன்செய் மார்க்கத்தாலே
முடிந்தவகைநன்மார்க்கம் விட்டகுறைமீர்க்க
மூர்க்கமுள்ளதுன்மார்க்கத்தாலேமைந்தா
கழிந்துநின்றயிடையான பிந்தமீறிக்
கபாலமென்றசுழினையிலே சூடுதாக்கிச்
செடுந்துவங்கவாசமதைத் துஞ்சப்பண்ணி
தொல்லுலகிற்பிறந்திறந்து போவார்காணே. (௧௫௭)

பிறந்திறந்துபோகாத நெறியைச்சொல்வேன்
பெருமைவிட்டுவுரிமைவிலேபிலமாய்நின்று
கறந்துநின்றவகாரமடா விந்துவிந்து
கருவானவிந்துமடா மதியுமாச்சு
சிறந்துநின்றமதியமெல்லா வுகாரமான
தேகமென்றசூரியனிற் சேர்ந்துகொண்டு
மறந்துவிடாதேமகனே மகாரமான
மகத்தானபராபரத்தில் மகிழ்ந்துநில்லே. (௧௫௮)

இராப்பகல்

நில்லென்றநிலைபறிந்து நிலையில்நின்று
நிலையில்லாச்சந்திரனை நிலையிற்சேரச்
சொல்லொன்றுந்தவறாத சொர்க்கமாகுஞ்
சோர்வானநாதமது வென்னவென்றால்
உல்லென்றரவிகானே சொர்க்கஞ்சொர்க்கம்
வூன்றிநின்றசந்திரன்றானாகமாச்சு
செலலென்றரவிமதிதானேதோவென்றால்
சேர்ந்துநின்றராப்பகலாய் நின்றவாறே (௱௫௯)

வாறானராப்பகல்தானென்சொல்லென்றால்
மக்களேவெளிதோன்றச்சொல்வேன்கேளு
காறானராவதுதான் கண்மூடலப்பா
கருவானபகலதுதான்பார்வைமைந்தா
கூறுகொண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
குருவானபதிதலத்திற் கூட்டிமேலே
நோகநின்றதவயோகஞ்செய்தால்
நிலையானசிவயோக மதுதான்பாரே (௱௬௰)

நாதவிந்துமெழுகு:

பார்க்கையிலேமூலமதி லக்கினியுண்டாகப்
பதிவானகர்ப்பமொன்று சொல்லக்கேளு

சேர்க்கையுடன் அகாரமுடன் உகாரம்ரெண்டுஞ்
செவ்வையுடன்ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
ஆர்க்குமிது தெரியாமல் ரவியில்வைக்க
அப்பனேநாதவிந்து வொன்றாய்ச்சேர்த்து
மார்க்கமுள்ளமெழுகாகு மைங்காமைந்தா
மனமகிழ்ந்துபணவிடைதான் மகிழ்ந்துகொள்ளே. (௱௯௧)

கொள்ளையிலேசந்திரன்றான் தேய்ந்துத்தேய்ந்து
கூர்மையுடன்ரவிதானும் பிரகாசமாகி
சுள்ளையிலேயகப்பட்ட பாண்டம்போலே
சுகமானதத்துவங்கள் செந்தீப்பட்டுத்
தொல்லையென்றசூழ்வினைக ளகன்றுபோகுந்
துருவமென்றவத துருவந் துலக்கமாகும்
பிள்ளையிலேவுங்களைப்போற் பிள்ளையுண்டோ
பின்னானரவியினிட பிலத்தைப்பாரே. (௱௯௨)

பிலமானகாயாதி கர்ப்பங்கொண்டு
பேணியேயில்லிடத்தைப் பிலக்கப்பண்ணி
குலமானமூலமுத லாறாதாரங்
கூட்டிநின்றநவக்கிரக மொன்பதிற்கும்
நிலமாகவநுக்கிரக மார்தான்காண்பார்
நீள்திசையில்சற்குருவைத் தேடிநின்று
நலமாகநாலஞ்சு வீட்டுக்கெல்லாம்
நடுவீடாய்நின்றவநுக் கிரகந்தானே. (௱௯௩)

தானென்றவநுக்கிரகஞ் சுத்தப்பாழாய்த்
தவறாதபாழ்வீட்டை யென்னசொல்வேன்
கோனென்றகுருவருளால் வீட்டைநம்பிக்
கோடானகோடிசித்தர் தவமேசெய்தார்
ஏனென்றால்வ்வீட்டிற்குறிதானென்று
யென்னவென்றால் தூண்டாததியந்தீபம்
வானென்றவத்தீபம் பார்க்கவேண்டி
மகத்தானசத்திசிவ பூசைசெய்யே. (௱௯௪)

பூசையென்றசிவபூசை சத்திபூசை
புருஷமுடன்செய்வதற்கு யோகந்தங்கு
நேசமுடனப்பூசை மனதிலெண்ணி
நிச்சயமாய்க்குருவருளை சேர்ந்துக்கொண்டு
ஆசையென்றபலருசியை யகலத்தள்ளி
யருந்தருசிதனையருந்து மருந்துவோர்க்கு
மாசியென்றமயக்கமறு மனமேதக்கு
மகத்தானவாசியில் சென்றேறுவானே. (௧௯௫)

ஏறுவான்வாசியிற் சென்றேறியங்க
　　யிருட்டானபதிகடந்து வெளியிற்சென்று
தேறுவான்மனந்தேறி யமுர்தங்கொண்டு
　　சிந்தைமலுதொன்றாகித் தீபம்நோக்கிக்
கூறுவான்றுாரதிஷ்டி நடத்தையெல்லாங்
　　குருவானபராபரத்தின் குறிப்பினாலே
ஆறுவான்நவக்கிரக மருளைப்பெற்று
　　அன்பானவநுக்கிரக மாதிதானே. (௧௬௬)

ஆதியென்றவநுக்கிரகம் பிரபீடம்
　　அப்பனேன்சுழிமுனையாய்நின்றபீடம்
சோதியென்றசுடர்வடிவா யிருந்தபீடந்
　　தொடர்ந்துநின்றசீடனுக்குக் குருவானபீடம்
வாதியென்றவந்தகிரி தீபபீடம்
　　மனோன்மணியாள் சென்றுவிளையாடும்பீடம்
கோதிலாச்சுத்தமய மானபீடங்
　　கூர்மையுள்ளபீடமடா நந்திதானே. (௧௬௭)

நந்திவொளிகண்டவர்தாம் ஞானயோகி
　　நலமானசிவயோகி பிர்மயோகி
அங்கமுள்ளவஷ்டாங்க மானயோகி
　　யருவுருவாய்நின்றதொரு பரமயோகி
பங்கமுள்ளவாசியிலே யறிந்தயோகி
　　பதிவானகாயாதி கர்ப்பயோகி
கெந்தருவரானகேசரத்தில்வாழுங்
　　கெவுனமென்றகெவுனதி யோகிதானே. (௧௬௮)

தானென்றயோகத்துக் குறுதியென்ன
　　தன்மையுள்ளவாசியென்ற மூலமூலங்
கோனென்றகுருவருளால் வாசிமூலக்
　　குறிப்பறிந்துகொள்ளுவது மென்னவென்றால்
நானென்றவாணவத்தை நலமாய்த்தள்ளி
　　நடுவானபூரணத்தைப் பற்றிக்கொண்டு
மானென்றபிரணவத்துள் மனதைவைத்து
　　மகத்கானகேசரியைத் தொழுதுநில்லே. (௧௬௯)

தொழுதமுறையென்னவென்று லகாரதீட்சை
　　சுருக்கமுள்ளவுகாரமடா சத்திபூசை
பழுதொன்றுமில்லையாம விரண்டுமொன்றாய்ப்
　　பக்குவமாய்த்தான்செபித்துப் பதியில்நின்று
நெளிதமுள்ளமனதுறுதி யாகிவந்த
　　ரேசகமும்பூரகமும்நேரேசெய்து

முனிதமர்க்குள் நிறுத்திக் கும்பகத்தில்நின்று
முனையான தீபமதைத் தூண்டிப்பாரே (௧௭௰)

லிங்கத்தாரகுரு

தூண்டிமிகப்பார்க்கையிலே சோதிகாணுந்
துவாதிசாந்தத்தில்மன துறுதியாகும
தாண்டிமிகப்போகாம லறிவில்நின்றால்
சகலகலைக்கியானமெல்லாந் தானேதானாய்
வேண்டியதோர்கருமான மின்னமொன்று
வெகுதெளிவாய்ச்சொல்லுகிறேன் மெய்யதாக
பூண்டமன துறுதியினால் லிங்கந்தாரம்
புகழானவிந்துவுடன் கெந்திகூட்டே (௧௭௧)

பூட்டப்பாகெந்தியுடன் துருசுதானும்
பொருந்தவசுமோரிடையாய் நிறுத்துக்கொண்டு
நாட்டப்பாவதற்கிடைதா னதிசேர்த்து
நன்றானபழச்சாற்றால்கலவத்தாட்டு
ஆட்டப்பாயிராறு சாமமாட்டி
அரகராவழித்துருட்டி வட்டுப்பண்ணி
மூட்டப்பாசட்டிதனில் வைத்துமூடி
மூடுவதுமணற்கொட்டி யெரித்திடாயே (௧௭௨)

எரித்துமணல்கருகும்பபோ யிறக்கிவைத்து
இதமாகவாறினபினதிறந்துபாரு
குறித்தாரக்காறுமொன்றாய்க் கட்டிப்போகுங்
குருவாகமனந்தனிலே கூர்ந்துகொண்டு
வருத்தமிட்டுச்செம்புருக்கியதற்குநேராய்
மார்க்கமுடன்மருந்தீவாய் கிண்டிக்கிண்டித்
திருத்தமுடன்மருந்தீய்ந்து நன்றாவூதிச்
செம்புகளிம்பானதுவுங் கட்டிப்போச்சே. (௧௭௩)

கட்டிநின்றசெப்பதனைப் பதனம்பண்ணிக்
கருவாகவிடைக்கிடையே தங்கஞ்சேர்த்து
திட்டமுடன்வெள்ளிதனிற் பத்துக்கொன்று
செவவையுடன்றானுருக்கி யெடுத்துப்பாரு
வட்டமிட்டரவியொளியை யென்னசொல்வேன்
மார்க்கமுடனவ்வொளியைக் கண்டுநீயுந்
துட்டருடன்கூடாமல் விண்ணைநோக்கித்
துவாதசாந்தத்தில் மனந்துலங்கிநில்லே. (௧௭௪)

நில்லென்றநிலையறிந்து மனதுபூண்டு
நிலையான மூல்முதலாறுதாரம்

உள்ளென்றவுள்மூல மேலாதாரம்
ஒடுக்கின்றதத்துவமாந் தொண்ணூற்றாறுந்
தள்ளந்தப்பதிதனிலே நிறுத்தியந்தக்
தள்ளாலேயாகுதியாய்ச் சாம்பலாக்கிக்
கொள்ளுகிறவிதமென்ன வுத்தளமாய்ப்பூசிக்
குண்டலினந்திபொளிகூர்ந்துபாரே. (கஎடு)

ஞானம்

பாரப்பாரவிமதியு மொன்றாய்க்கூட்டிப்
பருவமுடன்புருவநடுப் பதிக்கப்பாலே
நேரப்பாவதனிலொரு கமலந்தோற்றும்
நின்றிலங்கும்கமலமதை நேரேபார்த்தால்
ஆரப்பாவறிவார்கள் ஞானதீபம்
அரகராசிவயோக மானதீபம்
மேரப்பாமெய்ஞ்ஞான தீபந்தன்னை
மெய்யாகக்கண்டுசிவயோகம்பாரே (கஎசு)

பாரப்பாமனதுகொண்டு அறிவிற்சென்று
பரிவானமூலமடா மூலாதாரம்
நேரப்பாநின்றதொரு வாருதாரம்
நிலையானநடுமைய மேலாதாரம்
வீரப்பாகொண்டவரி தாரந்தாரம்
மெய்யானதாரமடா விஞ்சைவிஞ்சை
கூரப்பாகுருவான விஞ்சைமூலங்
கூர்மையுடனம்மூலங் குறியாய்க்காணே (கஎஎ)

குறியாகக்கண்டந்தக் குறியில்நின்று
கூர்மையுள்ளதாரமதை யெடுத்துமைந்தா
சரியாகத்தானுருக்கிப் பாண்டத்திட்டுச்
சளியாதகாடியதி லிட்டுநன்றாய்
நெறியானமஞ்சளோடு வுப்புநேராய்
நினைவாகத்தானட்டி யதற்குட்சேர்த்து
நெரிவாகக்கிண்டிநன்றாய்பிசறிக்கொண்டு
தீயெரித்துவடுப்பேற்றி யெரித்திடாயே (கஎஅ)

எரித்தபதமாவுகண்டா லிறக்கிமைந்தா
வின்பமுடன்குளிரவைத்து மறுநாள்தானும்
திருத்தமுடன்முன்போலே பத்துமுறைசெய்தால்
செவிவாதாரமதிற் கசப்புநீங்கும்
வருத்தமென்றுநினையாமல் ரவியிற்போட்டு
மார்க்கமுடன்தானுணர்ந்து சுக்கிலம்போல்

கருத்துடனேதானுணர்ந்தி யெடுத்துநல்ல
கல்லுறலில்மாவாக யிடித்திடாயே. (௧௭௯)

இடித்திடுவாய்ச்சமூலமதை பொடியதாக்கி
இன்பமுடன்முன்போலேபாண்டத்திட்டு
வடித்ததொருமாவதற்கு வரைதான்பூர
மாட்டிநன்றாயொன்றாக்கி மைந்தாமைந்தா
தொடுத்ததொருபாண்டமதை மூடிமைந்தா
சுகமாகமண்டலந்தான் சமாதிவைத்து
நடுத்தரமாய்மனதுறுதி யாகக்கொண்டு
நடுவானபூரணத்தைத்தொழுதிடாயே- (௧௮௰)

தொழுதிடுவாய்முந்திமுந்திக் குருவைத்தானுந்
தொழுதபின்புஅகாரமென்ற சிவத்தைப்பூசிப்
பழுதொன்றுநினையாமல்சத்திதன்னைப்
பாலகனேமனதுறுதியாலேபூசி
தெளிதமுள்ளமனதாலே பூசைபண்ணி
நீமகனேகுருபூசை நன்றாய்ச்செய்து
வழிதவராதேயிருந்து சமாதிசென்று
மார்க்கமுடனக்கடத்தையெடுத்திடாயே (௧௮௧)

எடுத்ததொருபாண்டமதை மைந்தாநீயும்
ஏழெட்டுநாள்வரைக்கும் ரவியிற்போடு
தொடுத்கதொருமேற்கலசந் தள்ளிநீயும்
சுகமாகவரிதாரக் கடுகைமைந்தா
விடுத்ததைநீபீங்கான்றன் றாளிசேர்த்து
மெய்யாகவைத்ததைநீ பூசைபண்ணு
அடுத்ததொருபூசையென்ன வென்றால்மைந்தா
வாதியென்றநவகோண மிட்டுப்பாரோ. (௧௮௨)

பாரப்பாநவகோணமிட்டுக்கொண்டு
பரமாணுயேருவதை நடுவேவைத்து
காரப்பாசுகந்தமலர் பொற்பதத்தால்
கனிவாகவற்சனைகள் கருத்தாய்ச்செய்து
தேரப்பாவயிரவற்கு வடமாலைசாற்றிச்
சிவசிவாதீபமொடு தூபங்காட்டி
நேரப்பாநின்றபரமேருதன்னில்
நிலையானவமுதரசக் கடுகுவாங்கே. (௧௮௩)

வாங்கிடுவாய்கடுகில்நல்ல கடுகுபோலே
மைந்தனேதானெடுத்து நாவுதன்னில்

பாங்குபெறவைத்ததின்மே லங்கென்றேதான்
பதிவாகக்கண்டமதி லங்கென்றானு
சாங்கமுடனமுதரசந் தானேபொங்குந்
தன்மையுடன்தான்புசித்துத்தனதாய்மைந்தா
ஆங்கதிகொண்ட நுதினமும்மவாசிநோக்கு
அருளான்வாசியினாற் றீபநோக்கே. (௧௮௪)

பூரணலேகியம்.

நோக்குவதற்கின்னமொருவுறுதிகேளு
நுண்மையுள்ளபூரண லேகியந்தான்மைந்தா
வாக்குமன துறுதியடாமகத்தாம்போத
மனதுநெறியறிவான வாமபோதம்
ஏர்க்கையுள்ளபோதமதை யென்னசொல்வேன்
ஏகாந்தலேகியத்தினியல்புகேளே
சேர்க்கையுள்ளசெங்கமலத் தமுர்தம்வாங்கிச்
சிவசிவாபிங்கானிற்சேர்த்துக்கொள்ளோ. (௧௮௫)

சேர்த்ததொருபூரணத்திற் பூரஞ்சேர்த்துச்
சிவசிவாமிடைசரியாய சேர்த்துமைந்தா
பார்த்திபனேயெண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
பதிவாகரவிதனிலே வைத்துக்காரு
பூர்த்தமலாமுதரசம்பூரம்பொண்டும்
பொருந்திநின்றாய்க்கட்டியது புட்டுப்போலாம்
கார்த்திருந்துரவிதனிலே நவநாள்போடு
காரணமாயந்திடைக்குப்பூரஞ்சேரே. (௧௮௬)

பூரமதற்கிடைசரியாய்ச் சேர்த்துக்கொண்டு
புத்தியுடன்கலவமதில் நன்றாயாட்டிக்
காரமென்றலேகியத்தை யுருட்டிமைந்தா
கனமானபிங்கான்றன் மேருக்கேற்றி
வீரமென்றபூரணமே யென்றுபோற்றி
விபரமென்றநவகோணம் நடுவில்வைத்து
சாரமுடன்சர்க்குருவைத்தியானம்பண்ணிச்
சமரசமாய்க்கடுகளவுயெடுத்திடாயே. (௧௮௭)

எடுத்துநடுப்பூரணத்தைத்தொழுதுமைந்தா
யிதமாகமண்டலமேற்கொண்டாயானால்
அடுத்தமனையாறுமடாவலுத்துப்போகும்
அசைவானவாசியது வமர்ந்துநிற்கும்
தொடுத்ததொருதேகமடா வச்சிரகாயஞ்
சுந்தரம்போல்மன்மதனாய்த் துலங்குவாய்நீ

நடுத்தரமாய்ப்பூரணத்தி லிருந்துகொண்டு
நாதாந்தசிவ்யோகம் நண்ணுவாயே. (௱௮௮)

நண்ணுவதுபூரணத்தை நம்பவேண்டும்
நாதாந்தப்பேரொளியை நாடவேண்டும்
உண்ணுவதுசத்திசிவ பூசைவேண்டும்
ஒடுக்கமந்தநிலேதனிலே யுறுதிவேண்டும்
எண்ணுமந்தப்படியாக விருக்கவேண்டும்
ஏகாந்தச்சிவயோக வியல்புவேண்டும்
விண்ணதனைமெய்யாக நம்பிக்கொண்டு
மேலானசிவயோகம் விரும்பிநில்லே. (௱௮௯)

முப்பூச்சுன்னம்.

நில்லந்தநிலேதனிலே நிலேத்தால்மைந்தா
நீடூழிகாலமடாநிலேக்குந்தேகம்
கல்லென்றகல்லுதனேக் கருத்தாய்நீயும்
கருவானவுப்பதனே வாங்கிமைந்தா
உள்ளென்றவக்கினியிற் சுத்திபண்ணி
ஓர்நிறையாய்வெடிசீனம் நன்றாய்ச்சேர்த்துச்
செல்லென்றதன்னீரா லரைத்துமைந்தா
திறமாகவரைத்ததனே வட்டுப்பண்ணே. (௱௯௰)

பண்ணியந்தவட்டதற்குக் கவசம்பண்ணி
பரிவாகரவியிலிட்டுப் புடத்திற்போடு
தண்மையாய்ப்புடமாறி யெடுத்தபின்பு
தனதாகவஞ்சுமுறை முன்போற்செய்தால்
உன்னியதோர்காரமதை யெனனசொல்வேன்
வுகமையில்லாச்சுன்னமடா வேகமெத்த
விண்ணிறைந்தசுன்னமடா வேகமெத்த
வேதாந்தசிவ்யோகம விளங்குந்தானே. (௧௯௧)

தானனசுன்னமதில் வேதைகோடி
தயங்காதபற்பமடா கோடிகோடி
ஞானதக்கட்டினமூ முறுக்கினக்கோடி
பூரணமாய்ச்செயநீரின் புதுமைகோடி
கோரனகுருமுறைகள் கோடாகோடி
கூறுகிறகர்ப்பமுறை குணமோகோடி
ஊனனதேகமதிற் சுன்னஞ்சேர்க்க
ஒடுங்குகின்றமாய்கையெல்லா மோடிப்போச்சே. (௧௯௨)

போச்சென்றுவிடுகாதே காரச்சிப்பி
புதுமையுடன்சொல்லுகிறேனுக்கும்பிடானே

நீச்சென்றவோடதனை வாங்கிமைந்தா
நிலையாதவழலைதனையே சுத்திசெய்து
பேச்சொன்றுமில்லாத பொன்கபுரிவாங்கி
பெருமையுள்ளசத்தியது கூடச்சேர்த்து
மூச்சென்றதன்னீரால் கலவத்காட்டி
மூர்க்கமுடனாட்டியபின் வட்டுபண்ணே. (௧௯௩)

சத்த பற்பம்,

பண்ணியந்தவட்டதனை யுலர்த்திமைந்தா
பாலகனேமண்சீலைப் பதிவாய்ப்பண்ணி
சென்னிமையைநோக்கியந்தப் புடத்தில்வைத்துத்
தீப்பிடித்துயெரிகின்ற பருவந்தன்னில்
தன்னிமையாய்க்கலசமதை யெடுத்துமுன்போல்
தன்னீருற்றுனாட்டி வட்டுச்செய்து
புண்ணியனேமண்சீலை தானுஞ்செய்து
புத்தியாய்முன்போலே புடத்திற்போடே. (௧௯௪)

போட்டபுடமாறியபின் னெடுத்துப்பாரு
பூரணத்தின்கிருபையினால் வெளுத்துநீறும்
தாட்டிகமாய்நீறினதை வைத்துக்கொண்டு
சமரசமாயந்தி சந்தியுள்ளேகொண்டால்
நாட்டியதோர்வாதபித்தஞ் சிலேற்பனத்தால்
நாடிநின்றவியாதிகளும் நசித்துப்போகும்
பூட்டியதோர்திரையகலும் புதுமைகாணும்
பூரணமாய்ச்சிவயோகம் புனிதமாமே. (௧௯௫)

புனிதமுள்ளசிவயோக மெடுத்துப்பார்த்துப்
பூரணமாயந்தறிவிற் புனிதமாகக்
கெனிதமுடன்மவுனமதி லுரைத்துமைந்தா
கேசரத்திற்கேசரியாம் பூரணத்தைநம்பி
தொனிதமுள்ளசிலம்பொலியைக் கண்டுநீயுந்
தூண்டாதமணிவிளக்கைத் தொழுதுபோற்றி
மணிநாதமனோன்மணியை மனதிற்கொண்டு
மார்க்கமுள்ளசத்திசிவ மகிமைகேளே. (௧௯௬)

கேளப்பாசத்திசிவ மகிமைதன்னைக்
கிருபையுடனறிந்ததை யார்வணங்கப்போறார்
காலப்பாதனையறிவார் தலையைக்காணார்
காலுதலைவேறாகக் கருதுவான்பார்
மேலப்பாசத்தியென்ற ரூபந்தன்னை
மெய்பானவுயிர்சிவத்துக் குறுதிசெய்தால்

தாளப்பாதிறந்தமுர்தங் கொள்ளலாகுஞ்
சத்திசிவபூசையில்லான் மடையன்தானே. (௧௯௭)

பத்தியம்

தானென்றமடையரவர் வெகுபேருண்டு
தன்மையுடன்சத்திசிவ மறிந்திருந்தும்
நானென்றவாணவத்தை நீக்கமாட்டார்
நலமானபூரணத்தை நம்பமாட்டார்
தேனென்றகாயாதி கற்பங்கொள்ளார்
திருடரவர்வாய்மதங்கள் திறமாய்ப்பேசி
கோனென்றகுருவினிட மனைதக்கிண்டிக்
கூடழிந்துபோவாரைக் குறித்துத்தள்ளே. (௧௯௮)

தள்ளுவதுபெண்ணொடு புளியுமாகா
தாம்பூலமீனிறைச்சி சற்றுமாகா
துள்ளுவதுயானையுடன் கோபமாகா
துணையானதாரம்விட்டு மறுதாரமாகா
அல்லலென்றவலைவாகா வாசையாகா
வானந்தமானதொரு வறிவில்லில்லு
சள்ளையென்றசாகரத்தின் மூடரோடே
சற்றுறவுமாகாதுதனித்துநில்லே (௧௯௯)

தனித்திருந்துசத்திசிவ பூசைபண்ணுந்
தன்மையுடன்பாலமுர்தந் தானேகொள்ளுந்
தொனித்திருந்தபூரணத்தைச் சுகமாய்ப்பூசிச்
சுகமாகச்சிவயோகத் துறையில்நில்லு
மணித்திருத்தாளானகமலமுர்தங்கொண்டு
மயங்காதபூரணத்திற் றீபங்காணும்
அணித்திருந்தசிவயோகத் தண்டத்துச்சி
யம்பரமாஞ்சிதம்பரத்தி லடங்குமூத்தே- (௨௦௦)

முத்தானசிவயோக மிருநூறுதன்னை
முறையானகுருவெனவென் றெடுத்துப்பார்த்து
சித்தானசித்துவினை யாடுமைந்தா
சிவயோகமார்க்கமடர் திறந்தான்மெத்த
பத்தாசைகொண்டுமனமவுனமாகப்
பதியாகச்சிவயோக மிருநூறும்பார்
சித்தானபிறவியதுவற்றுப்போகும்
மேலானசிவயோகம்விளங்குமுற்றே. (௨௦௧)

இராமதேவர் சிவயோகம்-௨௦௦.

முற்றிற்று.

சிவமயம்.

இராமதேவர்சிவயோக அட்டவணை.

பொருள்	பக்கம்	பொருள்	பக்கம்
அஞ்சனம்	கக	பிர்மநிஷ்டை	கஎ
அண்டபிண்டச்சமாதிவைப்பு மெழுகு	௯	புருவமையநிதானம்	உ௯
இராப்பகல்	௩௬	பூசைவிதிசக்கரம்	உ
உருத்திரநிஷ்டை	கஎ	பூசைசெய்யுமார்க்கம்	௩
கடுக்காய்லேகியம்	உக	பூசையில்கூடும்பெயர்கள்	௪
கட்டுக்கொடிகருவித்தை	௰	பூரணத்தின்குணம்	௯
கல்லுப்புச்சுன்னம்	உ௫	பூரணலேகியம்	௪உ
குருவணக்கம்	க	மதியமூர்தலேகியம்	க௯
சத்தபற்பம்	௪௪	மந்திரத்தின்குணம்	௮
சதாசிவநிஷ்டை	க௮	மயேஸ்பரநிஷ்டை	க௮
சந்திரசூரியன்	௩௫	மானதவாலைபூசை	௫
சாஸ்திரவிபரம்	௪௪	மாலினிஷ்டை	கஎ
சிவயோகப்பெருமை	௪௩	மூப்பூச்சுன்னம்	௪௩
சுன்னத்தொந்தம்	உ௬	மூலிகைக்குணம்	௮
செம்புசுத்தி	௩௩	லிங்ககுரு	௩௪
ஞானம்	௪௰	லிங்கந்தாரகுரு	௩௯
தயிலம்	உஉ	லோகவர்திகுணம்	உ௬
தன்னைத்தானறிதல்	க௪	வர்னக்களிம்பு	கஉ
திலர்தமை	௩க	வல்லாரைக்கற்பம்	உ௰
நந்தியுப்புக்குரு	௩உ	வாசிவார்க்கநிலை	க
நாதவிந்துமெழுகு	௩எ	வாரவரிகுணம்	எ
நிஷ்டைவிபரம்	கஎ	வெள்ளிவித்தை	க௬
நிஷ்டைமுறை	௩௪	வேதைமார்க்கம்	க௩
பத்தியம்	௪௫	வேதைமார்க்கம்கூடறிலது	க௫

இராமதேவர்சிவயோகம்

அட்டவணை

முற்றிற்று.